விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 288 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 16 செவ்வாய்க்கிழமை (03.10.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சா்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

### நீதியின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துக

## முல்லை சட்டத்தரணிகள் தொடர் பணிப்புறக்கணிப்பு

(முல்லைத்தீவு)

நீதித் துறைக்கான சுதந்திரமும் சுயாதீன தன்மைகளும்உறுதிசெய்யப்படும் வரை தொடர் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுவோம் என முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் த.பரஞ்சோதி தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா அண்மையில் உயிர் அச்சுறுத்தல் காரணமாக பதவி விலகியிருந்தார்.

இந்நிலையில் நேற்று முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் இணைந்து அவசர கூட்டம் ஒன்றினை 15

### வடக்கு, கிழக்கு சட்டத்தரணிகள்

## முல்லையில் இன்று பாரிய போராட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா அச்சுறுத்தப்பட்டு பதவி விலகியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து முல்லைத்தீவில் இன்று பாரிய போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

வடக்குக் கிழக்கு சட்டத்தரணிகளால் குறித்த போராட்டம் இன்று முன்னெடுக்கப்பட 15

# நீதித்துறைக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிர்ப்புத் தெரிவித்து

- கிளிநொச்சியில் கவனயீர்ப்புப் போராட்டம்
- ஐ.நாவுக்கும் மனு, சட்டத்தரணிகள், பொதுமக்கள் பங்கேற்பு






(கிளிநொச்சி) நீதித்துறைக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நீதித்துறையின் சுயாதீனத்தையும் உறுதிப்படுத்தக்கோரி கிளிநொச்சியில் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. பொதுமக்கள், சட்டத்தரணிகள் குறித்த போராட்டத்தில் பங்கேற்றதோடு ஐ.நாவுக்கும் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (16ஆம் பக்கம் பார்க்க)

## நாடு முழுவதும் மதுச்சாலைகள் இன்று பூட்டு

(கொழும்பு)

நாடு முழுவதிலும் உள்ள அனைத்து மதுபானசாலைகளும் இன்று மூடப்படும் என மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கை மதுவரித் திணைக்களத் 15

## அரச பொருளாதார கொள்கையால் மக்களுக்கு பல்வேறு துன்பங்கள்

### அமெரிக்கத் தூதுவரிடம் எதிர்க்கட்சித் தலைவர்



(கொழும்பு)

தற்போதைய அரச பொருளாதாரக் கொள்கையினால்-இலங்கைப் பிரஜைகள் பெரும் இன்னல்களுக்கு உள்ளாகி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கிடம் தெரிவித்துள்ளார். 15

## சரவணராஜா பதவி விலகல்

### சிஐடி விசாரணை

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியும் நீதவானுமான சரவணராஜாவின் பதவி விலகல் தொடர்பில் விரிவான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு 15

### முல்லை நீதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல்

## யாழ்.மாவட்ட சட்டத்தரணிகள் 14 நாட்கள் எதிர்ப்பு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜாவிற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக, யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் தொடர்ச்சியாக இரு வாரங்களுக்கு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடத் தீர்மானித்துள்ளது.

யாழ்.மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக் குழு நேற்று ஒன்றுகூடி முக்கிய பல தீர்மானங்களை எடுத்துள்ளது.

இதன் போதே 15

### பேரினவாத அடக்குமுறைக்கு எதிராக

## யாழில் நாளை மனித சங்கிலிப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

பேரினவாத அடக்குமுறைக்கு எதிராகவும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியை அச்சுறுத்தியதைக் கண்டித்தும் யாழில் நாளை மாபெரும் மனித சங்கிலிப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

காலை 9 மணிக்கு மருதனார்மடத்திலிருந்து ஆரம்பமாகி யாழ்.நகர் வரை குறித்த மனித 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்துக்கள்

60 YEARS ANNIVERSARY

(1963.10.03 - 2023.10.03)



யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆசிரியர்

## திரு. சுப்பிரமணியம் சிவலிங்கம்

(பகுதித் தலைவர்)

(SLTS I, Sc.Trd, B.A Diploma)

கிளிநொச்சி மாவட்டத்தில்
ஆசிரியர் சேவைக்காலம்
28.09.1988 - 23.03.1997

**யாழ்.மாவட்டத்தில் ஆசிரியர் சேவைக்காலம்**

- யா/வல்வெட்டி இ.த.க.பாடசாலை 1997.03.24 - 2010.05.13
- யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி 2010.05.14 - 2023.10.02

2017, 2018ஆம் ஆண்டுகளில் சிறந்த ஆசிரியருக்கான தேசிய விருதான "குரு பிரதீபா பிரபா" விருதை பெற்றுக் கொண்டதுடன் கல்விச்சேவையில் ஆசிரியராக 35 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றியவருக்கு மணிவிழா வாழ்த்துக்களையும் பிறந்தநாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சித்திரச் செம்மலே சிறந்த ஆசானாய் சிரித்த
முகத்துடன் சிறப்புறச் சேவைகள் செய்து இல்லறத்தில்
நல்லறங்கள் இன்பமாய்க் காத்து இந்நாளில் அகவை
அறுபதில் கால் பதித்து பல்லாண்டு காலம் வாழ
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: பெற்றோர், மாமா, மாமி, மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மைத்துனர்கள், மைத்துனி, மருமக்கள், பெறாமக்கள், பேரன், பேர்த்தி

"குகன் குடிசை"
பொலிகண்டி.
077 809 8132

(C-7361)

# விபரீத முடிவெடுத்த பொலிஸார் மரணம்

## முல்லையில் சம்பவம்

(முல்லைத்தீவு)

விபரீத முடிவெடுத்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவில் நேற்று இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. முல்லைத்தீவு தலைமை பொலிஸ் நிலையத்தில் நிர்வாக பிரிவில் சாஜனாக கடமை புரியும் பொலிஸ் உத்தியோகத்தரே முல்லைத்தீவு விளையாட்டு மைதானத்திற்கு பின்பாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கென புதிதாக கட்டப்பட்டுக்கொண்டிருக்கும் கட்டட வளாகத்திலுள்ள குளியல் அறையில் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் அம்பாறையை சேர்ந்த இராமநாதன் சத்தியநாதன் எனும் 35 வயதுடைய பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த பொலிஸாரின் இறப்புக்கான காரணங்கள் இதுவரை கண்டறியப்படாத நிலையில் மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,299)

# பணியாட்கள் தேவை

இல.81 பிறவுண் வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்திருக்கும் அறிவுத்திருக்கோவிலில் இரவுக் காவல் மற்றும் துப்பரவு (Cleaning) வேலை செய்வதற்கு தனி, தனியாக ஆட்கள் தேவை.

தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண்

**077 037 6432**

(C-7360)

# பதவி வெற்றிடம்

- அலுவலகச் செய்தியாளர்
- தமிழ் ரைப்பிங் மற்றும் கணனி பக்க வடிவமைப்பு

அனுபவமுள்ளவர்களும் பயிலுநர்களும் (ஆண்கள்)

தகைமை : க.பொ.த உயர்தரம் கற்றிருத்தல்

வயது - 24 இற்கு மேல்

**076 097 3121**

# மணிவிழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்



யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆசிரியர்

## திரு. சுப்பிரமணியம் சிவலிங்கம் (பகுதித் தலைவர்)

(SLTS-I, Sc.Trd, BA Diploma)

**சேவை விபரம்**

கிளி/புளியம்பொக்கணை நாகேஸ்வரா வித்தியாலயம்
1988.09.28 – 1988.11.01

கிளி/ஆனையிறவு சி.த.க. பாடசாலை
1988.11.02 – 1991.01.27

கிளி/ கனகபுரம் மகா வித்தியாலயம்
1991.01.28 – 1991.02.04

யா/பலாலி ஆசிரியர் கலாசாலை
1992.02.05 – 1992.12.31

கிளி/ கனகபுரம் மகா வித்தியாலயம்
1993.01.01 – 1997.03.23

யா/வல்வெட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை
1997.03.24 – 2010.05.13

யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
2010.05.14 – 2023.10.02

எமது கல்லூரியில் 13 வருடங்கள் ஆசிரியராகவும் பகுதித் தலைவராகவும், ஆசிரியசேவையில் 35 வருடங்கள் பன்முக ஆளுமையுடன் சேவையாற்றி 02.10.2023 இல் ஓய்வு பெறும் திரு. சுப்பிரமணியம் சிவலிங்கம் ஆசிரியர் அவரும் அவர் தம் குடும்பமும் சகல நலன்களுடன் சிறப்பாக வாழ எல்லாம் வல்ல இறையருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி



## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் 2023, 2024 மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு திருத்த வேலைகளுக்கான

# கேள்வி கோரல்

2023.10.02ம் திகதிய பத்திரிகையில் கேள்வி கோரல் விளம்பரத்தில் தவறுதலாக கிடைக்கப்பெறும் கேள்வி கோரல் 2023.10.08 ஆம் திகதி பிற்பகல் 2.10 மணிக்கு திறக்கப்படும் 2.00 மணிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் எந்த கேள்வி கோரல்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என பிரசுரிக்கப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெறும் கேள்வி கோரல் 2023.10.09 ஆம் திகதி பிற்பகல் 2.10 மணிக்கு திறக்கப்படும் பிற்பகல் 2.00 மணிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் எந்த கேள்வி கோரல்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என திருத்தி வாசிக்கவும்.

| | |
|---|---|
| ப.க.பரமலிங்கம்<br>தலைவர்,<br>அறங்காவலர் சபை | ந.மோகனரூபன்<br>செயலாளர்<br>அறங்காவலர் சபை |

(C-7364)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் நடராசா குணநாதன்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10.03.1956 | 03.10.2020 |

ஆலமரமொன்று அடிசாய்ந்ததோ - வேரோடி
விழுது விட்டபெரு விருட்சமே எமை - பாரோடு
தவிக்கவிட்டு பாதியிலே போனதேனோ
மூன்றாண்டுகள் ஓடி மறைந்தாலும்
உங்கள் உயிர்மூச்சு மறைவதில்லை.
என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்
ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்போம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(17325)

ஐயனார் வீதி,
[illegible] சாவகச்சேரி

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதித்துறையின் சுயாதீனத்தை உறுதிப்படுத்தக் கோரி

# கிளிநொச்சியில் கவனயீர்ப்புப் போராட்டம்














இலங்கைத்தீவில் நீதித்துறை மீது அரச நிர்வாகத்துறையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வகை நெருக்கீடுகள் காரணமாக, நாட்டைவிட்டு வெளியேறிச் சென்றுள்ள முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் ரி.சரவணராஜாவிற்கு நீதியும் பாதுகாப்பும் கிடைக்கக் கோரியும் நீதித்துறையினது சுயாதீனத்தைப் பாதுகாக்கக் கோரியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி) கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் நேற்று கிளிநொச்சி நகரில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. (நி-100-315-316)

# இரண்டு வாரங்களில் பல வைத்தியசாலைகள் மூடப்படும் நிலையில்

## அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

**நாட்டில் சிக்கலான சூழ்நிலையில் இயங்கி வரும் பல வைத்தியசாலைகள் மற்றும் மத்திய மருந்தகங்கள் அடுத்த இரண்டு வாரங்களில் மூடப்படும் என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

மூடப்படும் அபாயத்தில் உள்ள சிறிய வைத்தியசாலைகள் குறித்து அடுத்த இரு வாரங்களில் சிறப்பு ஆய்வு நடத்தப்பட்டு தேவையான தகவல்கள் சேகரிக்கப்பட்டு அறிவிக்கப்படும்.

மீதமாக இருக்க வேண்டிய வைத்தியர்களின் எண்ணிக்கையை விட குறைவாக உள்ள வைத்தியசாலைகள், மருந்துகள் இல்லாத வைத்தியசாலைகள், ஆய்வக பரிசோதனைகளை மேற்கொள்ள முடியாத வைத்தியசாலைகள் போன்றவற்றில் வைத்தியர்களை தங்க வைப்பதில் பயனில்லை என சங்கத்தின் செயலாளர் ஹரித அலுத்கே சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை கோழைத்தனமாக யாராவது கருதினால் அதற்கு பதிலளிக்க தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

# அவசர மருந்துக் கொள்வனவு இடைநிறுத்தம்

(கொழும்பு)

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அவசரமாக மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்வதை இடைநிறுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சுகாதார அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல இதனைத் தெரிவித்துள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அணிக்காக விளையாடும் இறுதி உலகக் கிண்ண போட்டியே இது

## அஸ்வின் உருக்கம்



தமிழக வீரர் அஸ்வின் இது இந்தியாவுக் கான தனது கடைசி உலகக்கிண்ணமாக இருக்கலாம் என கூறியுள்ளார்.

இந்தியாவில் ஒருநாள் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் நாளை மறுதினம் தொடங்கவுள்ளது.

இந்தியாவுக்கான அணியில் தமிழக வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின் முதலில் இடம் பெறாதது கேள்விகளை எழுப்பியது.

ஆனால், ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட ஆல்-ரவுண்டர் வீரர் அக்சர் படேல் காயம் காரணமாக விலகினார்.

இதனால் அவருக்கு பதிலாக அஸ்வின் அணியில் இடம்பிடித்தார்.

நேர்காணல் ஒன்றில் பேசிய அஸ்வின், வாழ்க்கை ஆச்சரியங்கள் நிறைந்தது. அணி நிர்வாகம் காட்டிய நம்பிக்கையும் சூழ்நிலையும் என்னை உறுதிப்படுத்தின.

ஆனால் கடந்த சில ஆண்டுகளாக விளை யாட்டை ரசிப்பதே எனது முக்கிய நோக்கமாக இருந்து வருகிறது.

அதையே நான் இந்தப் போட்டியில் செய்வேன். என்னைப் பொறுத்தவரையில், நல்ல இடத்தில் இருப்பதும், விளையாட்டை ரசிப்பதும் என்னை நல்ல நிலையில் வைத் திருக்கும். மேலும் இந்தியாவுக்காக தான் விளையாடும் கடைசி உலகக்கிண்ணம் இதுவாக இருக்கும என தெரிவித் துள்ளார். (5-6)

# ஜேர்மன் கிளப் போட்டிகளில் அதிரடி காட்டும் இங்கிலாந்து வீரர்



பாயர்ன் முனிச் அணியில் இங்கிலாந்து கப்டன் ஹரி கேன் தொடர்ந்து மிரட்டலான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியின் தூணாக உயர்ந்துள்ளார்.

இங்கிலாந்து அணியின் கப்டனான ஹரி கேன் 14 ஆண்டுகளாக டோட்டன் ஹாம் ஹாட்ஸ்பர் அணியில் விளையாடி வந்தார். அதனைத் தொடர்ந்து ஜேர்மனியின் கிளப் அணியான பாயர்ன் முனிச் அணியில் சமீபத்தில் இணைந்தார். அணியில் இணைந்ததில் இருந்து ஹரி கேன் மிரட்டலான ஆட்த்தினை வெளிப் படுத்தி வருகிறார்.

பாயர்ன்அணிக்காக விளையாடியுள்ள 6 போட்டிகளில் 8 கோல்கள் அடித்து சாதனை படைத்துள்ளார் ஹரி கேன்.

இதன்மூலம் பாயர்ன் முனிச் ரசிகர்களின் பேராதரவை ஹரி கேன் பெற்றுள்ளார். நேற்று முன்தினம் நடந்த லெய்ப்ஜிக் அணிக்கு எதிரான போட்டியில் ஹரி கேன் பெனால்டி வாய்ப்பில் அசத்தலாக கோல் அடித்தார்.

எனினும் இந்தப் போட்டி 2-2 என டிராவில் முடிந்தது. பாயர்ன் அணி பண்டஸ் லிகா தொடரின் புள்ளிப்பட்டியலில் 3 ஆவது இடத்தில் உள்ளது.

இங்கிலாந்து அணிக்காக 59 கோல்கள் அடித்துள்ள ஹரி கேன், டோட்டன்ஹாம் அணிக்காக 213 கோல்கள் அடித்துள்ளார் என்பது குறிப் பிடத்தக்கது. (5-6)

# ரோகித் சர்மா அபாயகரமான வீரர் களத்தில் நிலைத்து விட்டால் வீழ்த்துவது கடினம்

## ஷதாப்கான்



உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்காக இந்தியா வந்துள்ள பாகிஸ்தான் அணி தற்போது பயிற்சி ஆட்டத்தில் கவனம் செலுத்தி வருகிறது.

இந்த நிலையில் அந்த அணியின் துணை கப்டனும், சுழற்பந்து வீச்சாளருமான ஷதாப்கான் நேற்று முன்தினம் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். இதன் போது அவர் கூறியதாவது.

உலகக் கிண்ண கிரிக்கெட்டில் பாகிஸ்தான்- இந்தியா (ஒக்.14 ஆம் திகதி) மோதலுக்கு இன்னும் பல நாட்கள் உள்ளன. அதற்கு முன்பாக எங்களுக்கு ஒரு பயிற்சி ஆட்டம் இருக்கிறது.

உலகக் கிண்ணத்திலும் இரு ஆட்டங்கள் உள்ளன. பாபர் அசாம், முகமது ரிஸ்வான், இமாம் உல்-ஹக் எங்கள் அணிக்காக தொடர்ந்து நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார்கள். சில ஆண்டுகளாக நன்றாக ஆடுகிறார்கள். அதனால் உலகக் கிண்ணத்தில் சிறப்பாக ஆடுவதை எதிர்நோக்கி உள்ளோம்.

எந்த அணி பந்து வீச்சில் அசத்துகிறதோ அந்த அணியே உலகக்கிண்ணத்தை வெல்லும் என்பது எனது நம்பிக்கை. ஏனெனில் இந்திய ஆடுகளங்கள் பேட்டிங்குக்கு சாதகமானவை. பவுண்டரி தூரமும் குறைவு. இத்தகைய சூழலில் பட்ஸ்மேன்களின் ரன்குவிப்பை கட்டுப்படுத்துவதும் விக்கெட் வீழ்த்துவதும் கடினம். நாங்கள் பந்து வீச்சில் அபாரமாக செயற்பட்டால் உலக சாம்பியனாக உருவெடுப்போம்.

பட்டிங்கை பொறுத்தவரை இந்தியாவின் ரோகித் சர்மாவை மிகச்சிறந்த வீரர் என்று சொல்வேன். அவர் களத்தில் நிலைத்து விட்டால் அபாயகரமானவராக மாறி விடுவார். அதன் பிறகு அவரது விக்கெட்டை வீழ்த்துவது கடினமாகி விடும். தனது அதிரடியான ஷாட்டுகளால் மைதானத்தின் நாலாபுறமும் பந்தை தெறிக்க விடுவார். கடைசியில் பவுலர்கள் நிலைமை தான் பரிதாபமாக இருக்கும். ஒரு



லெக் ஸ்பின்னராக இந்தியாவின் குல்தீப் யாதவை பிடிக்கும். அவர் நல்ல பார்மில் உள்ளார்.

ஆசிய கிண்ண கிரிக்கெட்டில் செய்த தவறுகளில் இருந்து பாடம் கற்றுள்ளேன் என அவர் தெரிவித்தார். (5-6)

# உலகக் கிண்ண போட்டிக்கான சின்னங்களை அறிமுகப்படுத்தியது ஐ.சி.சி

இந்தியாவில் நாளை மறுதினம் 50 ஓவர் உலக் கிண்ண தொடர் தொடங்க உள்ளது. இந்த தொடரில் இந்தியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, அவுஸ்திரேலியா உள்ளிட்ட 10 அணிகள் கலந்து கொள்கின்றன. கடந்த 10 ஆண்டுகளாக எந்த வித ஐ.சி.சி கிண்ணத்தை வெல்லாத இந்திய அணி இந்த முறை சொந்த மண்ணில் நடைபெறும் உலகக் கிண்ணத்தை கைப்பற்றும்முனைப்புடன்உள்ளது. உலகக்கிண்ணத் தொடர் நெருங்கி வரும் நிலையில் அனைத்து அணிகளும் உலகக்கிண்ண தொடருக்கு தீவிரமாக தயாராகி வருகின்றன.

இந்நிலையில் உலகக் கிண்ணத் தொடருக்கான சின்னங்களை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் வெளியிட்டுள்ளது. அரியானா மாநிலத்தின் குருகிராமில் நடந்த விழாவில் இது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனை யு- 19 உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய அணியில் இடம்பெற்றிருந்த யாஷ் துல் மற்றும் ஷபாலி வர்மா ஆகியோர்



வெளியிட்டனர். இந்த சின்னங்கள் ஆண், பெண் பாலின சமத்துவத்தை வெளிப் படுத்தும் விதமாக வெளியிடப்பட்டுள்ளன.

இதில் பெண் கதாபாத்திரத்திற்கு பிளேஸ் என பெயரிடப் பட்டுள்ளது. இது பந்து வீச்சாளர்கள்பண்புகளை கொண்டு வடிவமைக்கப்பட்டு உள்ளது. ஆண் கதாபாத்திரத்திற்கு டோங்க் என பெயரிடப்பட்டுள்ளது. இது பேட்ஸ்மேன்களின் பண்புகளை கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இவை ஆட்டத்தின்போது டிஜிட்டல் தளங்களின் மூலம் ஒளிபரப்பு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.(5-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வரிகள் நீக்கப்படுமானால் பால்மா விலை குறைவடையும்

(கொழும்பு)

பால்மா இறக்குமதி நட வடிக்கையின் போது 600 முதல் 650 ரூபா வரை வரியாக செலுத்த வேண் டியுள்ளது என இறக்குமதி யாளர்கள் தெரிவிக்கின்ற னர்.

இதன் காரணமாக கொழு ம்புத் துறைமுகத்திற்கு கொண்டு வரப் படும் பால்மாவின் விலை சுமார் 1,100 ரூபாவாக காணப்படுகிறது என பால்மா இறக்குமதியா ளர்கள் சங்கத்தின் உறு ப்பினர் லக்ஷ்மன் வீரசூரிய சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த வரி நீக்கப்படும் நிலையில் பால்மா பக்கெட் ஒன்றினை 600 முதல் 650 ரூபாவிற்கு இடைப் பட்ட விலையில் பொது மக்களுக்கு வழங்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இறக்குமதி செய்யப்படும் பால் மாவிற்கு 10 வீதம் புதிய வரியை விதிப்பதற்கு வர்த்தக அமைச்சு அண் மையில் தீர்மானம் மேற் கொண்டது.

இதன்படி, ஒரு கிலோ கிராம் பால்மாவை இலங் கைக்கு இறக் குமதி செய்யும் போது 225 ரூபா வரியாக செலுத்தப்படுவதாக லக்ஷ மன் வீரசூரிய தெரிவித்துள்ளார்.

அத்துடன், பெறுமதி சேர் வரி (வற்) 165 ரூபா, சமூக பாது காப்பு வைப்புத் தொகை 55 ரூபா மற்றும் விமான சேவை கள் வரி 122 ரூபா வும் அற விடப்படுவதாக அவர் குறிப்பிட் டுள்ளார்.



இதன்படி, பால்மா கிலோ ஒன்றுக்கு மொத்தமாக 567 ரூபா வரியாக செலுத்தப்படு கிறது.

குறித்த வரிகள் நீக்க ப்படும் நிலையில் இரண்டு கோடி மக்க ளுக்கு குறைந்த விலையில் பால்மா பக்கெட்டுகளை வழங்க முடியும் என பால்மா இறக்குமதி யாளர்கள் சங் கத்தின் உறு ப்பினர் லக்ஷ்மன் வீரசூரிய தெரிவித்துள்ளார். (நி-5)

---

## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்
## சபைக்குச் சொந்தமான கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரல்

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி:- 04.10.2023 ஆம் திகதி தொடக்கம் 24.10.2023 ஆம் திகதி வரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 25.10.2023 ஆம் திகதி மு.ப 10.00 மணிவரை

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி:- 25.10.2023 ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :- கலந்துரையாடல் மண்டபம், தலைமை அலுவலகம் , நல்லூர் பிரதேச சபை.

| தொ. இல | கடை விபரம் | தற்போதைய மாதாந்த வாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் (VAT,NBT நீங்கலாக) | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| 01 | கொக்குவில் மீன்சந்தை வளாகத்தில் அமைந்துள்ள மேல்மாடிக் கடை இல 1/1 | 6,000.00 | 1,440,000.00 | 22,000.00 | 2,000.00 |
| 02 | கொக்குவில் மீன்சந்தை வளாகத்தில் அமைந்துள்ள மேல்மாடி கடை இல 2/1 | 7,000.00 | 1,680,000.00 | 25,000.00 | 2,000.00 |
| 03 | கொக்குவில் தபால் அலுவலகத்தின் மேல்தளத்தில் அமைக்கப்பட்ட கடைத்தொகுதி | 17,000.00 | 4,080,000.00 | 61,000.00 | 2000.00 |

கேள்வி தொடர்பான முழுமையான விபரங்கள் மற்றும் கேள்விப்படிவம் என்பவற்றை தலைமை அலுவலகத்தில் மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம் .

**செயலாளர்,**
**நல்லூர் பிரதேச சபை.**
**03.10.2023**

(சி-7363)

---

# மரண அறிவித்தல்

## திருமதி. சத்தியானந்தன் தர்னலதா

**(ஓய்வு நிலை ஆசிரியர் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)**



**யாழ்ப்பாணம் கலட்டியைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. சத்தியானந்தன் தர்னலதா 02.10.2023 நேற்று காலமானார்.**

**அன்னார் காலஞ்சென்ற நவரத்தினம் (சக்கரை), சரஸ்வதியின் அன்பு மகளும் காலஞ்சென்ற இரத்தின சபாபதி (அப்பாத்துரை), இராஜேஸ்வரியின் (ராசாத்தி) இன் அன்பு மருமகளும், இரத்தி சனசபாபதி சத்தியானந்தனின் அன்பு மனைவியும், இவர் பிரேமலதா, செல்வலதா, விஜயகுமாரன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.**

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 03.10.2023 செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.**

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

**கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.**

**தகவல்: குடும்பத்தினர்**

(17315)

---

# இராசிபலன்

**03.10.2023**
**புரட்டாதி 16 , செவ்வாய்க்கிழமை**
**சதுர்த்தி முற்பகல் 10.29 மணிவரை**
**கார்த்திகை முன்னிரவு 10.58 மணிவரை**
**சுபநேரம் 10.32-12.02 மணிவரை**
**இராகுகாலம் 3.02-4.32 மணிவரை**
**கார்த்திகை விரதம், சந்திராஷ்டமம்- அத்தம், சித்திரை**
**வள்ளுவன்**

**மேஷம்:** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், தன்னம்பிக்கையும், துணிவும் அதிகரிக்கும், குடும்பத்தேவைகளை நிறைவு செய்யும் வாய்ப்புண்டு.

**கடகம்:** குடும்பத்தினரிடையே குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், காரிய அனுகூல முண்டு.

**துலாம்:** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும்.

**மகரம்:** பிள்ளைகள் வழியில் உதிரிவருமானங்கள் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.

**ரிஷபம்:** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டை அழகாக வைத் திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு, உற்சாகமான நாள்.

**விருச்சிகம்:** இரவு பகலாக பாடு பட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், நல்லவர்கள் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**கும்பம்:** மனதில் தோன்றுவதை செய்வீர்கள், உறவுகள் வழியில் ஏற்பட்ட முரன்பாடுகள் அகலும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**மிதுனம்:** குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, தொழிலில் கூடுதல் பொறுப்புக்களால் வேலைச் சுமை கூடும், சுப விரயங்கள் கூடும் நாள்.

**கன்னி:** வழிபாட்டால்பெருமை காண வேண்டிய நாள், நண்பர்களுக்குள் நிலவிய கசப்புக்கள் மாறும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு:** கடன் பிரச்சினைகளை மாற்றியமைப்பீர்கள், தடைகள் அகன்று தனவரவு அதிகரிக்கும், உடல் நலன் சீராகும், இனத்தார் வகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**மீனம்:** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக் குரியவர்களாக நடந்து கொள்வர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**பாராட்டுக்கு நாவின் ஈரம் மட்டும் போதாது இதயத்தின் ஈரமும் வேண்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாத்மா காந்தியின் ஜெனனதினத்தை முன்னிட்டு யாழில் காந்தீயம் வெளியீடு



(யாழ்ப்பாணம்)
காந்தி ஜெயந்தியை முன்னிட்டு ஒக்டோபர் 2 ஆம் திகதி யாழில் இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் மகாத்மா காந்தியின் 154ஆவது பிறந்தநாள் விழா நேற்று கொண்டாடப்பட்டது. கன்சல் ஜெனரல் ராகேஷ் நட்ராஜ் யாழ்ப்பாணம் அரியாலை மற்றும் கார்கில்ஸ் சதுக்கத்தில் உள்ள காந்தி சிலைக்கு மாலை அணிவித்து மலர் ஞ்சலி செலுத்தினார்.

இந்நிகழ்வில் வடமாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், யாழ்ப்பாண அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன், நகராட்சி ஆணையர் த.ஜெயசீலன், யாழ். பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து ஸ்ரீசற்குணராஜா, கல்வி அமைச்சின் செயலாளர் என்.பி.பற்றிக் திரஞ்சன, யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர். சத்தியமூர்த்தி, சிவபூமி அறக் கட்டளைத் தலைவர் அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் உதவிச் செயலாளர் கலாநிதி ஆறு திருமுருகன், சங்கத்தின் உதவிச் செயலாளர் எம்.சாந்தன் சத்தியகீர்த்தி, அமைப்பின் உறுப்பினர்கள், சமயத் தலைவர்கள், பிரமுகர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் அதேவேளை காந்தீயம் ஏடு வெளியிடப்பட்டுள்ளது. (5-6)

# அமெரிக்காவை சேர்ந்த இருவருக்கு மருத்துவத்துக்கான நோபல் பரிசு




(ஸ்டாக்ஹோம்)
மருத்துவத்துக்கான நோபல் பரிசு நேற்று அறிவிக்கப்பட்டது. இதில், அமெரிக்காவை சேர்ந்த கட்டாலின் கரிக்கோ, ட்ரூ வைஸ்மேன் ஆகிய இரு விஞ்ஞானிகளுக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் மருத்துவம், இயற்பியல், வேதியியல், பொருளாதாரம், அமைதி, இலக்கியம் ஆகிய 6 துறைகளில் மகத்தான சாதனை படைத்தவர்களுக்கு உலகின் மிக உயரிய விருதாக கருதப்படும் நோபல் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்படுகிறது.

அந்த வகையில் 2023 ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசுஅறிவிக்கும் முதல் நாளான நேற்று மருத்துவத் துறைக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது.

நோபல் கமிட்டியின் தலைவர் நோபல் பரிசு பெறுபவரின் பெயரை அறிவித்தார்.

2023ஆம் ஆண்டிற்கான மருத்துவ நோபல் பரிசானது அமெரிக்காவை சேர்ந்த விஞ்ஞானிகள் கட்டாலின் கரிக்கோ, ட்ரூ வைஸ்மேன் ஆகிய இருவருக்கு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. "கொவிட்-19 தொற்று நோய்க்கு எதிராக பயனுள்ள எம்.ஆர்.என்ஏ (MRNA) தடுப்பூசிகளை உருவாக்கியதற்காக" இவர்களுக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு யாழிலும் இடம்பெற்ற கவனயீர்ப்பு போராட்டம்



(அராலி)
காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சர்வதேச சிறுவர் தினத்தில் யாழ்ப்பாணத்தில் கவனயீர்ப்பு போராட்டமென்றை நேற்றுமுன்தினம் நடாத்தியுள்ளனர்.

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்களை மீட்டுத்தர வேண்டுமென வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் யாழ் மாவட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

எமது பிள்ளைகளைக் காணவில்லை என கடந்த பத்து வருடத்திற்கு மேலாக நாங்கள் போராடி வருகிறோம். ஆனால் இதுவரையில் இலங்கை அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இனியும் தாமதிக்காது சர்வதேசம் காத்திரமான உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென மீண்டும் மீண்டும் கோரிக்கை விடுக்கின்றோம் என தெரிவித்தனர். (5-6-104)

## துன்னாலை பகுதியில் சந்தேகநபர்கள் இருவர் கைது

(கரணவாய்)
துன்னாலை குடவத்தை பகுதிகளில் தேடப்பட்டு வந்த நான்கு சந்தேகநபர்களில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். நெல்லியடி பொலிஸ் பொறுப்பு அதிகாரி காஞ்சனா விமலவீர தலைமையிலான, பொலிஸ் சம்மன் தலைமையிலான குழுவினரே இரு சந்தேகநபர்களையும் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர். விசாரணையின் பின் பருத்தித்துறை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (5-6-60)

# சமூக கட்டமைப்பு சிதைந்து போனமையே சமுதாய சீரழிவிற்கு காரணம்

## ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் இளங்கோவன்

(யாழ்ப்பாணம்)
இன்று இருக்கின்ற பல்வேறு சமூகமட்ட சீரழிவிற்கு அடிப்படைக் காரணம் சமூக கட்டமைப்பு சிதைந்துபோனமையே என ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்தார்.

யாழ்.கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நூற்றாண்டு விழாவின் கல்லூரிதின விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் சமூகப் பாதுகாப்பென்பது இன்றைய கால கட்டத்தில் முக்கியமானதொன்றாகும். அன்றைய காலங்களில் கிராமங்களில் ஒரு அதிபர் அல்லது ஆசிரியர் வீடுகளில் மக்கள் காலையில் கூடுவார்கள் மக்களை வழிப்படுத்துபவராக அவர்கள் காணப்பட்டார்கள் அது தீர்க்கமான நல்ல முடிவுகளை தருகின்ற சமூகங்களை கொண்டிருந்தது. இன்று இது மாறியுள்ளது மீண்டும் இவ்வாறு வரவேண்டும் என்றால் முன்பு போல இறுக்கமான கட்டமைப்புக்கள் சமூகங்களில் உருவாக்கப்படவேண்டும். கூடுகளிற்குள் வசிக்கும் மாணவர்களாகவே இன்று இருக்கிறார்கள் சமூக செயற்பாடுகளிற்கு இயலுமை கொண்டவர்கள் அல்லாமல் எமது மாணவர்கள் மாறியிருப்பது எதிர்காலத்தினை கேள்விக் குறியாக்கியுள்ள காலமாக இது இருக்கிறது என தெரிவித்தார். (5-6-33)

# 2022 ஆம் ஆண்டிற்கான கணக்கறிக்கை தயாரித்தலில் வடமாகாணம் ஆதிக்கம்

(கரணவாய்)
2022 ஆம் ஆண்டிற்கான அரச துறைகளில் சிறந்த கணக்கறிக்கை தயாரித்தலில் வல்வெட்டித்துறை நகரசபை முதலாமிடத்தையும் பருத்தித்துறை நகரசபை இரண்டாமிடத்தையும் வவுனியா நகரசபை மூன்றாமிடத்தையும் பெற்று முறையே தங்கம்,வெள்ளி, வெண்கலம் விருதுகளை வென்றுள்ளன.

அநுராதபுரத்திலுள்ள வட மத்திய மாகாண வளாகத்தில் இடம்பெற்ற குறித்த விருது வழங்கும் நிகழ்விலேயே இவ் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

வடமராட்சி பிரதேசத்தில் இருக்கக்கூடிய இரண்டு நகர சபைகளிலும் இலங்கை நிர்வாக சேவையை பெண் செயலாளர்களே தற்போது கடமையாற்றி வருகின்றனர்.

இதேவேளே பிரதேச சபைகளில் வவுனியா வடக்கு பிரதேச சபை முதலாமிடத்தையும் துணுக்காய் பிரதேச சபை இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளன. (5-6-60)

# தனிமையில் வீட்டில் இருந்த மூதாட்டியிடம் 5 பவுண் நகை திருட்டு

(திருமலை)
திருகோணமலை நகரில் துறைமுகப் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கிறீன் வீதியில் நேற்று காலை பரிசு கொடுக்க வந்துள்ளதாக கூறி வீட்டுக்குள் வந்த வாலிபர் ஒருவர் வீட்டில் இருந்த மூதாட்டியிடம் இருந்து ஐந்து பவுண் நிறையுடைய தங்கச் சங்கிலியை அபகரித்து சென்றுள்ளதாக துறைமுகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இலக்கத்தகடு இல்லாத இரு சக்கர வாகனத்தில் வந்த ஒரு இளைஞரால் மேற்படி கொள்ளைச்சம்பவம் இடம்பெற்றதாக துறைமுகப் பொலிஸார் தெரிவித்தனர். (5-6)



பாஷையூர் பங்கின் "அன்பிய விழா -2023" கடந்த சனிக்கிழமை பங்குத்தந்தை எம்.ஜெறோசெல்வ நாயகம் தலைமையில் இடம்பெற்றது. இதில் சிறப்பு நிகழ்வாக புனித சம்மிக்கேல் நாட்டுக்கூத்தும் இடம்பெற்றிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் முதியோர் இல்லங்களில் வாழ்கின்றனர்

## தேசிய முதியோர் செயலகம் தகவல்

(கொழும்பு)

பராமரிப்பை இழந்த 8 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் முதியோர் இல்லங்களில் வாழ்ந்து வருவதாக தேசிய முதியோர் செயலகம் தெரிவித்துள்ளது.

349 முதியோர் இல்லங்களில் 8,806 முதியவர்கள் இவ்வாறு வாழ்ந்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

5,624 தாய்மார்களும் 3,182 தந்தைமார்களும் பிள்ளைகள் மற்றும் உறவினர்களின் பராமரிப்பு இன்றி முதியோர் இல்லங்களில் வாழ்ந்து வருகின்றனர். வடமாகாணத்தில் 756 முதியவர்களும் மேல் மாகாணத்தில் 1,242 முதியவர்களும் இவ்வாறு இல்லங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் 1,071 முதியவர்களும் வடமேல் மாகாணத்தில் 809 முதியவர்களும் சப்ரகமுவ மாகாணத்தில் 789 முதியவர்களும் இவ்வாறு இல்லங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

70 வயதிற்கும் மேற்பட்ட 416,667 பேர் முதியோர் உதவித்தொகையை பெறுவதாக தேசிய முதியோர் செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

புற்றுநோய், சிறுநீரகம் மற்றும் இதய நோயினால் பாதிக்கப்பட்ட முதியவர்களுக்கு அதிகபட்சமாக 25,000 ரூபாவிற்கு உட்பட்ட நிதிவசதியினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# பாரிய அளவில் அதிகரிக்கும் தேசிக்காய் விலை-வர்த்தகர்கள் கவலை



(கொழும்பு)

இலங்கையில் தேசிக்காய் ஒரு கிலோகிராமின் விலை 2100 ரூபாவை எட்டியுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன்படி, பல பகுதிகளில் தேசிக்காய் ஒன்றின் விலை சுமார் 50 ரூபாவை எட்டியுள்ளதாக அந்த பகுதி வர்த்தகர்கள் குறிப்பிடுகின்றனர்.

குறித்த விலைக்கு தேசிக்காய்களை கொள்வனவு செய்து, விற்பனை செய்ய முடியவில்லை என வர்த்தகர்கள் கவலை வெளியிட்டனர்.

தேசிக்காய் அறுவடை குறைந்துள்ளமையே, விலை அதிகரிக்கப்பட்டுள்ளமைக்கான காரணம் என தெரியவருகின்றது.

ஊவா மற்றும் வறட்சியுடனான பகுதிகளிலேயே தேசிக்காய் செய்கை அதிகளவில் முன்னெடுக்கப்படுகின்றன. (நி-5)

# பயணச்சீட்டின்றி பயணித்தால் மூவாயிரம் ரூபா அபராதம்

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகளில் பயணச்சீட்டு இல்லாமல் பயணிப்பதற்கான அபராதத்தை மூவாயிரம் ரூபாவாக உயர்த்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனால், பயணச்சீட்டை பெற்றுக் கொள்ளாமல் பிடிபடுபவர்கள், மூவாயிரம் ரூபாய் அபராதத்துடன், இரு மடங்கு கட்டணத்தை செலுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பேருந்துகளில் பயணச்சீட்டு இல்லாமல் பயணிப்பதால் நாளாந்தம் சுமார் 70 இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதையடுத்து இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பிலான சட்ட நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அடுத்த வருடம் இந்த சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் எனவும் இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் லலித் டி. அல்விஸ் தெரிவித்தார்.

தற்போது, பயணச்சீட்டு இல்லாமல் பயணம் செய்தால், 250 ரூபாய் அபராதமும் இரண்டு மடங்கு கட்டணமும் அறவிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# 105 சிறுவர்கள் தொழுநோயால் பாதிப்பு வைத்தியர் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 105 சிறுவர்கள் தொழுநோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக தொழுநோய் தடுப்பு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் பிரசாத் ரணவீர தெரிவித்துள்ளார்.

தொழுநோயின் தாக்கத்துக்கு உள்ளான சிறார்கள் 14 வயதுக்குட்பட்டவர்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)



**யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரி பழைய மாணவர்களின் ஒன்றுகூடலின் போது JO-75 குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒஸ்மானியா கல்லூரி வாசிகசாலையை கல்லூரி அதிபர் N.M.Shafie SLPS-1 அவர்கள் நாடா வெட்டி திறப்பதை படத்தில் காணலாம். அருகில் கலாபூஷணம் பரீட் இக்பால், விரிவுரையாளர் S.H.M. ஸல்மான், S.H.நியாஸ் ஹாஜியார், M.B.M.றினோஸ் ஆகியோரையும் படத்தில் காணலாம்.** (17320)

# மனித சங்கிலிப் போராட்டத்திற்கு அனைவரும் அணி திரளுங்கள்

## அரசியல் கைதிகள் விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு அழைப்பு

(நெளுக்குளம்)

நீதிபதிக்கே நீதி இல்லாத நாடு. இந்நாட்டில் நீதி தேடுவோர் பாதுகாப்போடு வாழ முடியாது என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் அனைத்து அரச துறைகளும் அதிகார அரசியல் ஆதிக்கத்திற்குள் மிக நீண்டகாலமாக வைக்கப்பட்டுள்ளதை போன்று நீதித்துறையும் காலத்திற்குக் காலம் அரசியல் மயப்பட்டுள்ளது. அது பேரினவாதத்தின் கொடூரத்துக்குள் சோரம் போய் உள்ளது என்பதை முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகல் வெளிப்படுத்தியுள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவும் தமிழர்களின் வரலாற்றுத் தன்மை, தேசிய அடையாளம், இருப்பு என்பன அனைத்தும் அழிக்கப்படும் பேரினவாதத்தின் செயற்பாடுகளை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தவும் நாளை புதன்கிழமை முன்னெடுக்கப்படவுள்ள மனித சங்கிலிப் போராட்டத்திற்கு பொதுமக்கள் ஆதரவளிக்குமாறும் வடகிழக்கு தமிழர் தாயகம் எங்கும் அமைப்பு ரீதியில் தொடர் போராட்டங்களை ஒழுங்கு செய்யுமாறும் அரசியல் கைதிகள் விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு வேண்டுகோள் விடுக்கின்றது.

நீதிபதி சரவணராஜா உயிர் பாதுகாப்பு கருதியே வெளிநாட்டில் தஞ்சமடைந்துள்ளார். இதற்கு நீதித்துறையும் பாதுகாப்புத் துறையும் நேரடி குற்றத்துறை என்றாலும் இந்நிலைக்குள் இத்துறைகளுக்கு அழுத்தம் கொடுத்த பேரினவாத அரசியல்வாதிகளும் சிங்கள பௌத்த சமயவாதிகளுமே காரணம் எனில் நீதித்துறையும் அதிகார அரசியலுக்கும் பேரினவாதத்திற்கும் சோரம் போய்க் கொண்டிருக்கின்றது என்பதை தெளிவாக்கி இருக்கிறது.

நீதிபதிக்கே நீதி இல்லாத நாடு. நீதி தேடி வெளிநாட்டுக்கு தள்ளும் நாடு. இந்நாட்டில் நீதி தேடுவோர் பாதுகாப்போடு வாழ முடியாது என்று நீதிபதி வெளிநாட்டில் காலடிவைத்துள்ளார்.இது இதுவரை காலமும் வெளிநாட்டில் தஞ்சமடைந்த அனைத்து தமிழர்களின் செயற்பாட்டையும் நீதி செயற்பாடுகளையும் நியாயப்படுத்துகின்றது .

தமிழர்களுக்கு நியாயமான நீதி நிறைந்த எதிர்காலம் இல்லை. நீதிக்காக போராடுவது உயிர் அச்சம் மிக்கது என்பதை சர்வதேசம் தெளிவாக உணரும் நேரமிது.

இதனை சர்வதேசத்துக்கு கூர்மைப்படுத்த வெளிநாட்டில் புகலிடமாக்கியுள்ள அனைத்து தரப்புக்களும் தமிழர் தேசத்தில் வாழும் மக்களின் பாதுகாப்பு கருதி சர்வதேச அரசியல் தலைமைத்துவங்களுக்கு கூட்டாக அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும்.

நாட்டின் பேரினவாதம் மீண்டும் எம்மை வலிந்து போராட்டத்துக்குள் தள்ளி உள்ளது. போராட்டத்தின் வடிவத்தை நாம் தீர்மானிப்போம். அரசியல் தலைமைத்துவங்கள் போராட்டத்தினை தமது அடையாள இருப்புக்காக மட்டும் பாவிக்காது தமிழர் தேசம் கோரும் அரசியல் தீர்வை நோக்கியும் போராட்டம் முன்னெடுக்க வேண்டும். கடந்த கால கசப்புகளை மறந்தும் தமது சோரம் போன அரசியலை விட்டு விலகியும் போராட்டத்திற்கு கைகோர்க்குமாறு தமிழர் தேசம்' வேண்டுகோள் விடுக்கின்றனர். (நி-5-299)

# பேருந்து கட்டணங்கள் அதிகரிக்கப்படாது

## தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்

(கொழும்பு)

பேருந்து கட்டணங்கள் அதிகரிக்கப்படாது என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டிருப்பினும் பேருந்துக் கட்டணத்தில் மாற்றம் இல்லை என அந்த சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்னதெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் எரிபொருள் விலை திருத்தம் போன்று மாதாந்த அடிப்படையில் பேருந்து கட்டண திருத்தம் மேற்கொள்ளப்படும் வகையில் தேசிய பேருந்து கட்டண திருத்த கொள்கையில் திருத்தம் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## 154 ஆவது காந்தி ஜெயந்தி தினம்



(டில்லி)

நாடு முழுவதும் நேற்று மகாத்மா காந்தியின் 154 ஆவது பிறந்தநாள் கொண்டாடப்பட்டது.

இந்த நிலையில் டில்லி ராஜ்காட்டில் உள்ள மகாத்மா காந்தி நினைவிடத்தில் ஜனாதிபதி திரவுபதி முர்மு மலர் தூவி மரியாதை செலுத்தினார். அவரை தொடர்ந்து காந்தி நினைவிடத்தில் பிரதமர் மோடி மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

மேலும் துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கர், மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்டோரும் காந்தி நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.(5)

## சைபர் வழக்கில் இம்ரான்கானை குற்றவாளியாக அறிவித்த நீதிமன்றம்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் மற்றும் அவரது உதவியாளர் முகமது குரேஷி ஆகியோர் மீது அரசு ரகசியங்களை வெளிப்படுத்தியதாக குற்றம்சாட்டப்பட்டது. சைபர் வழக்கு என அறியப்படும் இந்த வழக்கு விசாரணை பாகிஸ்தானின் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இதில் அவர்கள் மீதான குற்றச்சாட்டு உறுதியானதால் இருவரையும் குற்றவாளிகள் என நீதிமன்றம் அறிவித்தது. இம்ரான்கான் ஏற்கனவே தோஷகானா ஊழல் வழக்கில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் அடைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (நி-5)

## பொலிஸ் வளாகத்தில் தீ விபத்து
## 38 பேர் காயம்
### எகிப்தில் சம்பவம்





(கைரோ)

எகிப்தில் இஸ்மாலியா மாகாணத்தில் பொலிஸ் வளாகத்தில் ஏற்பட்ட பாரிய தீ விபத்தில் குறைந்தது 38 பேர் காயமடைந்துள்ளார்கள்.

குறித்த சம்பவம் நேற்று காலை இடம்பெற்றுள்ளது.

இந்த தீ விபத்தால் பாதுகாப்பு பணியகத்தின் தலைமையகத்தின் சில பகுதிகள் இடிந்து விழுந்ததாக சிவில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காயமடைந்த 26 பேரில், 24 பேர் மூச்சுத் திணறலாலும் இருவர் தீக்காயங்களாலும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சகத்தை மேற்கோள் காட்டி உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தீ விபத்து குறியீடுகள் அரிதாகவே செயற்படுத்தப்படுவதாலும் அவசரகால நிலைமைகள் போதான செயற்பாடுகள் தாமதமாகவும் இருப்பதால் எகிப்தில் தீ விபத்துக்கள் அடிக்கடி இடம் பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது. இஸ்மாலியாவில் உள்ள தீயணைப்பு வீரர்கள் தீயை கட்டுப்படுத்தியுள்ளார்கள் எனவும் தீ விபத்துக்கான காரணம் வெளியாகவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

## இரவு விடுதியில் ஏற்பட்ட திடீர் தீ விபத்து
### 13 பேர் உயிரிழப்பு



(மார்ரிட்)

ஸ்பெயினில் உள்ள முர்சியாவில் நகரில் உள்ள இரவு விடுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் 13 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அட்டலயாஸ் பகுதியில் உள்ள பிரபலமான டீட்டர் இரவு விடுதியில் சுமார் 6 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட காணொளியில், கட்டடத்தின் மேலே தீப்பிழம்புகள் எரிவதையும் அதன் பெரிய ஜன்னல்களில் இருந்து அடர்ந்த, இருண்ட புகைவெளியேறுவதையும் காட்டுகிறது.

காணாமல்போன மற்றும் அந்த வேளை வளாகத்தில் இருந்தவர்களை அவசர சேவைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் தேடி வருகின்றனர். சம்பவம் குறித்து அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5)

## மணிப்பூரில் மேலும் 5 நாட்கள் இணையத்தள சேவை தடை நீடிப்பு

(டில்லி)

மணிப்பூரில் இரு இன மக்களுக்கிடையில் 4 மாதங்களுக்கு மேலாக கலவரம் இடம் பெற்று வருகின்றது.

இக்கலவரத்தில் 170 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

கலவரத்தைக் கட்டுப்படுத்துவதற்காக மாநில பொலிஸாருடன் மத்திய பாதுகாப்பு படையினரும் குவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அண்மையில் இரண்டு மாணவர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து மணிப்பூரில் பல்வேறு போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் மணிப்பூர் முழுவதும் 5 நாட்களுக்கு இணையத்தள சேவையை அரசாங்கம் நிறுத்தி வைத்திருந்தது.

இதன்படி நேற்றுடன் நிறைவடையவிருந்த இணையத்தள சேவைக்கான தடையை மேலும் 5 நாட்களுக்கு நீடிப்பதற்கு மணிப்பூர் மாநில அரசு உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-5)

## மெக்சிக்கோவில் தேவாலய மேற்கூரை உடைந்து விழுந்ததில் 7 பேர் பலி



(மெக்சிக்கோ)

மெக்சிக்கோவில் உள்ள தேவாலயமொன்றின் மேற்கூரை உடைந்து வீழ்ந்து விபத்து ஏற்பட்டதில் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

மெக்சிக்கோவின் கடலோர மாநிலமான தமௌலிபாஸில் உள்ள செண்டா குரூஸ் தேவாலயத்தின் கூரை உடைந்து வீழ்ந்ததில் 7 பேர் உயிரிழந்துள்ளதோடு இடிபாடுகளுக்குள் 20 பேர் சிக்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த பகுதியில் தொடர் மீட்பு பணிகள் இடம்பெற்று வருவதாக மீட்பு படையினர் தெரிவித்துள்ளனர். (நி-5)

## கா...
## தூய்...



(டில்...

காந்...
பிரதமர்...
அழைப்...
லட்சம்...
பணி ந...
தேச...
காந்திய...
தினம்...
நினை...

2...

(கு...
ன...
ஊர்...
கொ...
கடத்...
அதிர்...
டெ...
ஒட்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



# பிரேசிலில் அதிகரிக்கும் வெப்பநிலை

## 100 இற்கு மேற்பட்ட டொல்பின்கள் உயிரிழப்பு

### சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கவலை

(பிரேசிலியா)

**அதிகரிக்கும் வெப்ப நிலை காரணமாக இது வரை நூற்றுக்கு மேற்பட்ட டொல்பின் மீன்கள் இறந்துள்ளதோடு ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோரின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது.**





பிரேசில் நாட்டின் வட மேற்கில் தொடங்கி கொலம்பியா, பெரு உட்பட பல தென்அமெரிக்க நாடுகள் வரை பரவியுள்ளது அமேசான் மழைக்காடு.

வடக்கு பிரேசிலில் அமேசோனாஸ் மாநிலத்தின் தலைநகரமான மனோஸ் நகருக்கருகே உள்ளது டெஃப் பிராந்தியம். இப் பகுதியிலும் அமேசான் காடுகள் பரவியுள்ளது. இப்பகுதி முழுவதிலும் சமீப காலமாக பெரும் வறட்சி ஏற்பட்டுள்ளது. நீர்நிலைகளில் வெப்பம் இதுவரை இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளது. ஒரு சில இடங்களில் வெப்பம் 102 டிகிரி / பேரன்ஹீட் அளவை தொட்டுவிட்டது.

இதன் காரணமாக இங்குள்ள டெஃப் ஏரியில் நூற்றுக்கணக்கான டொல்பின்கள் உயிரிழந்து மிதக்கின்றன.

டொல்பின் மீன்கள் இறந்ததற்கும் அதிகளவு வெப்பத்திற்கும் உறுதியான தொடர்புள்ளது. ஆனால், வெப்பநிலை அதிகரிப்பதற்கான காரணத்தை இதுவரை கண்டறிய முடியவில்லை என பிரேசில் அறிவியல் துறையின் ஆதரவில் இயங்கும் மமிரவா நிறுவனம் தெரிவித்துள்ளது.

உயர்ந்து வரும் வெப்பநிலை காரணமாக அமேசான் காடுகளில் உள்ள நீர்மட்டமும் குறைந்து கொண்டே வருகிறது. பரப்பளவில் கிட்டத்தட்ட அவுஸ்திரேலியாவின் அளவிற்கு பரந்து விரிந்துள்ள இக்காடுகளில் இது போன்ற வானிலை நிகழ்வுகள் நடைபெறுவதால் 1 லட்சம் பேருக்கும் மேற்பட்டோரின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

இயற்கைக்கு எதிரான பல நடவடிக்கைகளில் மனிதர்கள் ஈடுபட்டு வருவதால் இது போன்ற விசித்திரமான பருவநிலை மாற்றங்கள் ஏற்படலாம் என சுற்றுச்சூழல் நிபுணர்கள் தொடர்ந்து எச்சரித்து வந்தனர்.

இத்தகைய சம்பவம் இதற்கு முன்னர் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தககது. (நி-5)

# காந்தி ஜெயந்தியை முன்னிட்டு தூய்மைப்பணியில் ஈடுபட்ட மோடி





(டில்லி)

காந்தி ஜெயந்தியை முன்னிட்டு பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பில் நாடு முழுவதும் 92 லட்சம் இடங்களில் தூய்மைப் பணி நடைபெற்றிருந்தது.

தேசத்தந்தை மகாத்மா காந்தியின் 154 ஆவ்து பிறந்த தினம் நேற்று கொண்டாடப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் நாடு தழுவிய தூய்மை இயக்கத்தில் பங்கேற்குமாறு மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்திருந்தார்.

பிரதமர் நரேந்திர மோடி, ஹரியாணாவை சேர்ந்த மல்யுத்த வீரர் அங்கித் பையன் பூரியாவுடன் இணைந்து தூய்மைப் பணியில் ஈடுபட்டார். (நி-5)

# லிபியா-இத்தாலி இடையே நேரடி விமான சேவை

(திரிபோலி)

லிபியா,இத்தாலி இடையே 12 ஆண்டுக்குப் பின்னர் மீண்டும் நேரடி விமான சேவை ஆரம்பமாகியுள் ளது.

லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி முகமது கடாபி, சர்வாதிகாரியான இவர் கடந்த 2011 ஆம் ஆண்டு அங்குள்ள கிளர்ச்சியாளர்களால் படுகொலை செய்யப்பட்டார்.

இதனையடுத்து லிபியா உடனான விமான போக்குவரத்திற்கு இத்தாலி மற்றும் பல ஐரோப்பிய நாடுகள் தடை விதித்தன.



இந்நிலையில் லிபிய விமான நிறுவனமான மெட்ஸ்கி ஏர்வேஸ் மூலம் இத்தாலிக்கு மீண்டும் நேரடி விமான சேவை ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டது.

எனவே லிபியா தலைநகர் திரிபோலியில் உள்ள மிட்டிகா சர்வதேச விமான நிலையத்தில் இருந்து இத்தாலியின் பியூமிசினோ விமான நிலையத்திற்கு எம்.டி-522 என்ற விமானம் இயக்கப்பட்டது.

12 ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட இந்த விமான சேவைக்கு லிபியா பிரதமர் அப்துல் ஹமீத் டிபீபா பாராட்டு தெரிவித்துள்ளார்.(நி-5)

# 25 பேர் துப்பாக்கி முனையில் கடத்தல்

## நைஜீரியாவில் இறுதிச்சடங்கில் பயங்கரம்

(அபுஜா)

நைஜீரியாவில் இறுதிச்சடங்கு ஊர்வலமொன்றில் கலந்து கொண்டவர்கள் ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தென்மேற்கு மாகாணமான ஒட்டோவிலே கடந்த ஞாயிற்றுக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தின்போது சுமார் 25 பேர் துப்பாக்கி முனையில் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

எனினும் கடத்திச் சென்றவர்கள் யார்? எதற்காக இவ்வாறு செய்தனர் என்பது குறித்த தகவல் இதுவரை வெளியாகவில்லை.

இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றனர். (நி-5)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் கட்டணத்தை அதிகரித்தால் போராட்டத்தில் குதிப்பேன்

## எல்லே குணவங்ச தேரர் எச்சரிக்கை



(கொழும்பு)

மின்கட்டணத்தை மீண்டும் அதிகரித்தால் ஒட்டுமொத்த மக்களையும் ஒன்றிணைத்து வீதிக்கு இறங்குவேன் என தேசிய வளங்களை பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் எல்லே குணவங்ச தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

பொருளாதார பாதிப்புக்கும் நாட்டு மக்களுக்கும் எவ்வித தொடர்புமில்லை. ஆனால் தற்போதைய பொருளாதார பாதிப்பின் சுமை ஒட்டுமொத்த மக்கள் மீதும் மனச்சாட்சியில்லாத வகையில் திணிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார பாதிப்பில் இருந்து மீள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார். ஆனால் நடைமுறைக்கு சாத்தியமான முன்னேற்றத்தையும் காண முடியவில்லை. பொருளாதார பாதிப்பினால் நடுத்தர மக்கள் வாழ்வதா? அல்லது இறப்பதா? என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

பொருளாதார நெருக்கடியின் சுமை மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது. ஆனால் அரசியல்வாதிகள் மாத்திரம் விடுமுறையை கழிக்க வெளிநாட்டு சுற்றுலா பயணங்களை மேற்கொள்கிறார்கள். பெரும்பாலான அரசியல்வாதிகள் நாட்டில் இருப்பதே இல்லை. வங்குரோத்து நிலைக்கு மத்தியில் அரசியல்வாதிகளுக்கான சலுகைகள் ஏதும் குறைக்கப்படவில்லை. அவர்கள் சுகபோகமாகவே வாழ்கிறார்கள்.

கடன் பெறுதல், மிகுதியாக உள்ள வளங்களை விற்பனை செய்தல் ஆகியனவே அரசாங்கத்தின் பிரதான பொருளாதார கொள்கையாக காணப்படுகிறது. தேசிய வளங்களை பாதுகாப்பதற்காக நாங்கள் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அரசாங்கத்துடன் போராடிக் கொண்டிருக்கிறோம்.

சர்வதேச நாணய நிதியம் இரண்டாம் தவணை கடன் வழங்கலை தாமதப்படுத்தியதை தொடர்ந்து மின்சார கட்டணத்தை மீண்டும் அதிகரிக்க அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

பலர் தொழில்வாய்ப்புகளை இழந்துள்ளார்கள். இவ்வாறான நிலையில் மீண்டும் மின் கட்டணத்தை அதிகரித்தால் மக்கள் அதை எவ்வாறு தாங்கிக் கொள்வார்கள். மின்கட்டணத்தை மீண்டும் அதிகரித்தால் ஒட்டுமொத்த மக்களையும் ஒன்றிணைத்து போராட்டத்தில் ஈடுபடுவேன். அது அரசாங்கத்துக்கு எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும் என அவர் தெரிவித்தார் (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 150 | 150 |
| உருளைக்கிழங்கு | 200 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 500 | 600 |
| தக்காளி | 120 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 160 | 160 |
| கோவா | 200 | 150 | 200 |
| கரட் | 300 | 250 | 350 |
| பூசணி | 80 | 60 | 80 |
| புடோல் | 80 | 100 | 200 |
| வாழைக்காய் | 200 | 160 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 250 |
| பாகற்காய் | 350 | 350 | 450 |
| வெண்டக்காய் | 100 | 100 | 250 |
| கருணைக் கிழங்கு | 100 | 150 | 200 |
| பயற்றங்காய் | 250 | 200 | 200 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 |
| பீற்றூட் | 140 | 150 | 200 |
| கறிமிளகாய் | 250 | 300 | 400 |
| முருங்கைக்காய் | 200 | 100 | 120 |
| போஞ்சி | 300 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 180 | 120 | 140 |
| கீரை - 1 பிடி | 80 | 50 | 80 |
| தேசிக்காய் | 1200 | 1300 | 1600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60-90 |
| இராசவள்ளி | 300 | 400 | 500 |
| வெங்காயப்பூ | 250 | 400 | 400 |
| முள்ளங்கி | 80 | 150 | 150 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 60 |
| வல்லாரை | 40 | 20 | 60 |
| ஈரப்பலா | 80 | 120 | 140 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2928

### கல்யான்

தூங்கும் போது கல்யாணக் கனவு கண்டால் திருமணம் நடக்காது.



இது என்னடா புது புரளியா இருக்கு. எனக்கு படுத்த உடனே அந்தக் கனவு தான்டா வருகுது.

### விதுசா

ஜவுளி கடைன்னு எழுதி வையுங்கடா பார்க்கவே பயமா இருக்கு.



### கவின்

திருடப் போதும் போது ஏன் உன் மனைவியையும் கூட்டிட்டு போன?




விக்குற விலைவாசில ரெண்டு பேரும் வேலைக்கு போனா தான் குடும்பம் நடத்த முடியும் ஜட்ஜ் ஐயா

### மிதுனா



இன்றைய தலைமுறைக்கு இந்த கஷ்டம் தெரிய வாய்ப்பில்லை.
கறுப்பு வெள்ளை டிவியில் இங்கிலாந்து VS நைஜீரியா போட்டி பார்க்கும் போது வரும் கஷ்டம்.
பிரைட்னஸை அதிகரித்தால் இங்கிலாந்து அணி தெரியாது.
குறைத்தால் நைஜீரியா அணி தெரியாது.
அன்றனா ஆடினால் இரண்டு அணியும் தெரியாது.

### சாலினி

ஒரு ரூபாய் சாக்பீஸ்..
பல ஆயிரம்
"அறிவாளிகளை"
உருவாக்கிறது...
ஒரு லட்சம் ரூபாய் கைபேசி
பல கோடி
"கண்பார்வையை"
இழக்கச் செய்கிறது.

### திலக்சன்

வெண்டக்காய் நிறைய சாப்பிட்டா ஞாபக சக்தி நல்லா வரும்.
'பரீட்சை நல்லா எழுதலாம் 'ன்னு சொன்னியே என் தெய்வமே?
ஆமா சொன்னேன் சாப்பிட்டுப் போனியா?



பரீட்சை எழுதப் போனா வெண்டக்காய் சாப்பிட்டதைத் தவிர வேற ஒன்டும் ஞாபகத்துக்கு வரல என் தெய்வமே

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நீதிகோரி வவுனியாவில் கவனயீர்ப்பு



(குருமன்காடு)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்று முன்தினம் வவுனியாவில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக இடம்பெற்ற குறித்த போராட்டமானது யுத்தத்தின் போது காணாமல் போன மற்றும் இராணுவத்திடம் சரணடைந்தவர்களின் குடும்பங்களின் பிள்ளைகள் காணாமல் போனமை தொடர்பாகவும் நீதியான விசாரணைக்கு சர்வதேச விசாரணை தேவை எனவும் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள்,சகோதரர்களை தேடும் சிறுவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (5-6-250)

# சோதனைச் சாவடியில் பொலிஸாரை தாக்கிவிட்டு வாகன சாரதி தப்பிஓட்டம்

- ஐஸ்போதை மீட்பு
- ஒருவர் கைது

(மன்னார்)

மன்னார் முருங்கன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளக்கமம் பகுதியில் ஐஸ் போதைப்பொருள் விற்பனைக்கென மாதிரியுடன் வருகை தந்த வவுனியா மருத்துவமனையில் பணிபுரியும் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் பிரதான சந்தேகநபரான முருங்கன் மருத்துவமனை அம்புலன்ஸ் சாரதி தப்பியோடியுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்க பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட ரோந்து நடவடிக்கையின் போது முருங்கன் ஆதார மருத்துவமனையில் பணியாற்றும் சாரதி ஒருவரும் வவுனியா மருத்துவமனையில் பணியாற்றும் நபர் ஒருவரும் ஐஸ் போதைப் பொருள் விற்பனைக்கு என மாதிரி ஐஸ் 179 கிராமுடன் நேற்று முன்தினம் இரவு முருங்கன் பாடசாலை பின்புற மைதானத்தில் அரச அம்புலன்ஸ் வாகனத்தில் வருகை தந்த நிலையில் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர் .

இந் நிலையில் குறித்த இரு நபர்களும் பொலிஸ் அதிகாரியை தாக்கி தப்பிக்க முயன்ற நிலையில் பிரதான சந்தேகநபரான அம்புலன்ஸ் சாரதி தப்பித்து ஓடியுள்ளார். மற்றைய நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்புலன்ஸ் , கைப்பற்றப்பட்ட ஐஸ் மற்றும் இரண்டாம் சந்தேகநபர் மேலதிக விசாரணையின் பின்னர் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

மேலும் குறித்த இரு சந்தேகநபர்களின் தாக்குதலில் காயமடைந்த பொலிஸ் அதிகாரி மன்னார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (5-6-285)

**வடகிழக்கு புனர்வாழ்வு அமைப்பினால் முல்லைக்குமரன் ஆலயத்திற்கு 2.5 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட குழாய்க்கிணறு கையளிக்கும் நிகழ்வு முள்ளியவளை 3 ஆம் வட்டார பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.**

(படம்- சதீஸ்)



# தாயக மண்ணின் புதைகுழியில் தமிழர்கள் புதைக்கப்படுகிறார்கள்

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள்

(நெளுக்குளம்)

தமிழ் தேசத்திலே தமிழர்கள் புதைக்கப்பட்டு கொண்டிருக்கிறார்கள் என்பது நீதிபதி மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி மரியசுரேஸ் ஈஸ்வரி தெரிவித்தார்.

முல்லைத்தீவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்,

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்திலே சரியான நீதியை வழங்கும் நீதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல் காரணமாக நாட்டைவிட்டு சென்றிருக்கின்றார். அவருக்கே இந்நிலைமை என்றால் போராடுகின்ற எங்களுக்கும் தமிழ் மக்களுக்கும் எந்த நீதி கிடைக்கும் என்பதனை சர்வதேசத்திற்கு எடுத்துக் காட்டாக கூறுகின்றோம். இந்நாட்டில் நீதி இல்லை என்றபடியால் தான் சர்வதேசத்தை கேட்டு நிற்கின்றோம்.

தமிழ்த் தேசத்திலே தமிழர்கள் புதைக்கப்பட்டு கொண்டிருக்கிறார்கள். அதனை நீதிபதி மூலமே தெரியப்படுத்தப்பட்டுள்ளது. எமக்கான உயிர் அச்சுறுத்தல் தொடர்ச்சியாக நடைபெற்று கொண்டிருக்கிறது. அத்தோடு சமூக செயற்பாட்டாளர்களுக்கும் உயிர் அச்சுறுத்தல் நடந்த வண்ணம் தான் இருக்கிறது. மதத்தால் எங்களை அடக்குகிறார்கள். பௌத்த மதத்தை கொண்டு வந்து பரப்பிக் கொண்டு இருக்கிறார்கள். தமிழர்களை நசுக்க வேண்டாம் என்பதோடு சர்வதேசம் நீதியை பெற்று தர வேண்டும் என தெரிவித்தார். (5-6-299)

# நீதிபதிக்கே நீதி இல்லை எனில் புதைகுழி விவகாரத்தில் நீதி கிட்டுமா?

## துரைராசா ரவிகரன் கேள்வி

(நெளுக்குளம்)

நீதிபதிக்கே நீதி கிடைக்க வில்லையென்றால் இந்த புதைகுழிக்கான நீதி கிடைக்குமா என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் நேற்று முன்தினம் இடம்பெற்ற போராட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்,

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், பெற்றோர்கள் இறுதியாக ஒப்படைத்த சிறுவர்கள் இன்றுவரை காணாமலாக்கப்பட்ட நிலையில் அவர்களை தேடி நாளாந்தம் வீதிகளிலே இருந்து தங்களுடைய உறவுகளுக்காக 2000 நாட்களை கடந்த நிலையில் போராடி கொண்டிருக்கிறார்கள்.

இதற்கு ஒரு முடிவு தேவையென பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில் தற்போது நீதிபதியினுடைய விவகாரம் வந்திருக்கிறது. நீதித்துறை சுயாதீனமாக இயங்க வேண்டும் என்ற நிலை இருக்கும் போது அந்த நீதித்துறையையே ஆட்டம் காண செய்யுமளவிற்கு அரசியல் ரீதியாக அரசாங்க தரப்புக்கள் அவருக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்தும் பல வகையில் துன்புறுத்தி முல்லை மாவட்ட நீதிபதி நாடு விட்டு நாடு சென்றுள்ளார்.

இந்நிலையில் கொக்குத்தொடுவாய் புதைகுழி விவகாரத்தில் புதைகுழி கூட மூடி மறைக்கப்படுமோ என்ற அச்சம் இருந்து கொண்டிருக்கின்றது. மேலும் பல திணைக்களங்கள் சேர்ந்து அகழப்படும் அகழ்வில் நீதி கிடைக்குமா? நீதிபதிக்கே நீதி கிடைக்கவில்லையென்றால் இந்த புதைகுழிக்கான நீதி கிடைக்குமா? எதிர்வரும் 30 ஆம் திகதி அடுத்த அகழ்வு என கூறப்பட்டது. அந்த அகழ்விலும் இந்த நீதியை எதிர்பார்க்கலாமா? என்ற கேள்வி எழுகின்றது. என்னிடம் மட்டுமல்ல மக்களிடமும் எழுகின்றது என மேலும் தெரிவித்தார். (5-6-299)

# நோயாளியைப் பார்வையிட வந்த நபரின் மோ.சைக்கிள் அபேஸ்

(தருமபுரம்)

கிளிநொச்சி மருத்துவமனை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று களவாடப்பட்ட சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

மருத்துவமனையில் சுகயீனம் காரணமாக அனுமதிக்கப்பட்ட நோயாளியை பார்ப்பதற்காக மன்னாரில் இருந்து வந்த நபர் ஒருவர் மருத்துவமனை வளாகத்தில் மோட்டார் சைக்கிளினை நிறுத்தி விட்டு நோயாளியைப் பார்க்க சென்றுள்ளார்.

திரும்பி வந்து பார்க்கும் போது மோட்டார் சைக்கிளினை காணவில்லை.இதனையடுத்து கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.(5-6-[illegible])


**மின்சார நிலைய வீதி,சுன்னாகத்தில் அமைந்திருக்கும் சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்க தலைமை காரியாலயத்தில் காவல் கடமை புரிய ஆண் பணியாளர் தேவை**

01. வயது எல்லை 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் 55 வயதிற்கு உட்பட்டவர்கள்
02. உடுவில் பிரதேச செயலகம், தெல்லிப்பளை பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்டிருத்தல் விரும்பத்தக்கது.
03. சம்பளம் நேரில் பேசி தீர்க்கப்படும்.
04. கடமை நேரம்.

தினமும் மாலை 04.30 மணிமுதல் மறுநாள் காலை 07.30 மணிவரையும்
சனிக்கிழமை மதியம் 01.30 முதல் ஞாயிற்றுக்கிழமை முழுநாளும் திங்கள் காலை 07.30 வரையும்.
ஆர்வம் கொண்டவர்கள் தொ.பே.இல-077 020 4378/ 077 104 2116/ 021 224 0022 தொடர்பு கொள்ளவும். அல்லது 04.10.2023 ஆம் திகதி தொடக்கம் 08.10.2023 ஆம் திகதிக்கு முன் காரியாலய கடமை நேரத்தில் நேரில் காரியாலயத்திற்கு சமுகம் கொடுத்து தங்கள் விபரங்களை பதிவு செய்ய முடியும்.

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.**

தலைவர்/பொது முகாமையாளர், சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ. சங்கம், மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.

(சி-7364)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 298





இருப்பேன்."

"ஊருக்குத் திரும்பும் போது இந்த வழியாக வந்தால் பூதத் தீவில் நீ இருக்கிறாயா என்று பார்க்கட்டுமா?"

"தீவுக்குள்ளே எந்தக் காரணத்தைக் கொண்டும் நீ வரக் கூடாது. வந்தால் விபரீதமாகும். இந்தப் படகு கடலோரத்தில் இருக்கிறதா என்று பார். இருந்தால் ஏதாவது ஓர் அடையாளம் வைத்துக் கொண்டு சத்தம் செய். நான் நேற்றுக் குயில் மாதிரி கூவினேனே அந்த மாதிரி நீ கூவ முடியுமா?"

"குயில் மாதிரி கூவ முடியாது? ஆனால் மயில் மாதிரி சத்தம் செய்வேன். இதைக் கேள்"

வந்தியத்தேவன் வாயைக் கையினால் மூடிக்கொண்டு மயில் கத்துவது போன்ற அகோரமான குரலில் கத்திக் காட்டினான்.

அதைக் கேட்டுப் பூங்குழலி கலகலவென்று சிரித்தாள்.

"இதுவரை சொன்னது சரிதான் மேலும் ஏதாவது சேர்த்துக் கொண்டு விடாதே. இதையெல்லாம் நான் அவரிடம் சொல்லச் சொன்னதாகச் சொல்லி விடாதே"

"சேச்சே என்னை முழுப் பைத்தியம் என்று நினைத்தாயா?"

"இளவரசர் அதற்கு ஏதேனும் மறுமொழி சொன்னால், அதை உள்ளது உள்ளபடி என்னிடம் சொல்ல வேண்டும். கூட்டியோ, குறைத்தோ சொல்லக் கூடாது."

"உன்னை மறுபடி நான் எங்கே பார்ப்பது?"

"என்னைப் பார்ப்பதில் என்ன கஷ்டம்?. கோடிக் கரையிலோ இந்தப் பூதத் தீவிலோ அல்லது இரண்டுக்கும் மத்தியில் படகிலோ

படகு நாகதீவின் கரையை அணுகியது. இருவரும் படகிலிருந்து இறங்கினார்கள். வந்தியத்தேவன் கரையில் ஏறி விடை பெற்றுக்கொண்டான். பூங்குழலி படகைத் திருப்பினாள். வந்தியத்தேவன் சபலத்துடன் திரும்பிப் பார்த்தான். "உன்னுடன் வருகிறேன்" என்று சொல்லி, அவளும் வரமாட்டாளா? என்ற ஆசை அவன் மனத்தில் இன்னமும் கொஞ்சம் இருந்தது. ஆனால் பூங்குழலி அவனைக் கவனிக்கவேயில்லை. அதற்குள் அவள் கனவுலோகத்தில் சஞ்சரிக்கப் போய்விட்டாள் என்பதை அவள் முகம் எடுத்துக் காட்டியது.

## பத்தாம் அத்தியாயம்
## அநிருத்தப் பிரமராயர்

இந்தக் கதையின் ஆரம்ப காலத்திலேயே நமக்கு நெருங்கிப் பழக்கமான ஆழ்வார்க் கடியான் நம்பியைக் கொஞ்ச காலமாக நாம் கவனியாது விட்டு விட்டோம். அதற்காக வாசகர்களிடமும் நம்பியிடமும் மன்னிப்புக் கோருகிறோம். முக்கியமாக நம்பியின் மன்னிப்பை இப்போது நாம் கோரியே தீர வேண்டும். ஏனெனில் ஆழ்வார்க் கடியான் இப்போது வெகு வெகு கோபமாயிருக்கிறான். அவனுடைய முன் குடுமி இராமேசுவரக் கடற்கரையில் அடிக்கும் காற்றில் பறந்து கொண்டிருக்கிறது. அவனுடைய கைத்தடியோ தலைக்கு மேலே சுழன்று கொண்டிருக்கிறது. அவனைச் சுற்றி ஆதி சைவர்களும் வீர சைவர்களும் பலர் சூழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஆர்ப்பாட்டம் பலமாக இருப்பதால் ஆழ்வார்க்கடியானுடைய கதி யாதாகுமோ என்று நமக்குக் கொஞ்சம் கவலையாகவுமிருக்கிறது. எனினும் நம்பியின் நரசிம்மாவதாரத் தோற்றமும் அவனுடைய கைத்தடி சுழலும் வேகமும் அந்தக் கவலையைப் போக்குகின்றன.

வந்தியத்தேவனும் இளையபிராட்டியும் பேசியதைக் ஒட்டுக் கேட்ட ஆழ்வார்க் கடியான் பழையாறையிலிருந்து அன்றைய தினமே புறப்பட்டான். வாயு வேக மனோ வேகமாகத் தென் திசையை நோக்கிச் சென்றான். வழியில் எங்கும் அவன் சைவ வைஷ்ணவச் சண்டையில் இறங்கவில்லை. காரியத்துக்குத் குந்தகம் வரக் கூடாதென்று மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு வலுவில் வந்த சண்டைகளைக் கூட வேண்டாம் என்று ஒதுக்கித் தள்ளிவிட்டு நடந்தான். மதுரையில் சிறிது நேரம் தங்கினான். அங்கு அவன் அறிய விரும்பிய செய்தியை விசாரித்து அறிந்து கொண்டு இராமேசுவரத்துக்குப் புறப்பட்டான்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## மாயமாகிய ஊதா ஜாடி

ஒரு காலத்தில் லண்டன் நகரின் அழகான வீதியில் ஒரு பெரிய அடுக்குமாடி குடியிருப்பு இருந்தது. அந்த குடியிருப்பின் ஒரு ஜன்னல் வழியாக இரு கண்கள் அந்த வீதியின் கடைகளை வேடிக்கை பார்ப்பதே வாடிக்கையாக வைத்திருந்தது. அந்த கண்கள் அந்த கடைகளில் இருக்கும் பொருட்களை வாங்கி வரவேண்டும் என நீண்ட நாட்களாகவே ஏக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அது ஒரு குழந்தையின் கண்கள் தான்.



அவள் பெயர் ரோஷ் மாண்ட். அவளுக்கு ஒரு தம்பி இருந்தான். அவளது அப்பா அரசு அதிகாரியாக இருந்தார். அவள் தினமும் பள்ளி விட்டு வந்ததும் அந்த ஜன்னல் வழியாக பார்ப்பாள். ஒருநாளாவது அம்மாவுடன் சென்று இதையெல்லாம் வாங்கிவிட வேண்டும் என தீர்மானம் வைத்திருந்தாள்.

ரோஷ் மாண்...

ரோஷ்மாண்ட் சீக்கிரம் பள்ளி சீருடைகளை மாற்று, நாம் கடை வீதிக்கு செல்லவேண்டும் என்று அவளின் அம்மாவின் குரல் கேட்டது. அடிச்சது நமக்கு ஜாக்பாட் என துள்ளி குதித்தாள். இதுவரை [illegible]

கலாம் என மனக் கோட்டை கட்டினாள். தயாராகி அம்மாவுடன் நடக்க ஆரம்பித்தாள். தூரத்தில் இருந்து பார்த்த கடை வீதியை ரசித்தவாறே நடந்தாள். முதலில் பொம்மை கடையை பார்த்தாள். அதிலிருந்து சில பொம்மைகளை வாங்க திட்டமிட்டிருந்தாள். அம்மாவிடம் " இதை நான் வாங்கிக் கொள்ளலாமா என கேட்டாள். இல்லை ரோஸ்மாண்ட். இது உனக்கு பயன்படாது என்றார் அம்மா. அவள் சோகமாக நடக்க ஆரம்பித்தாள். தொப்பிகள் நிறைந்த கடைகளைப் பார்த்தால் அம்மா அம்மா இதை வாங்கி தரீங்களா என்றாள். இல்லை ரோஸ்மாண்ட் இதை நீ எல்லா நேரங்களிலும் பயன்படுத்த மாட்டாய் என்றார். அவளும் சோகமாக அங்கிருந்து நடந்தாள்.

பளபளவென மின்னும் ரிப்பன்களை கண்டதும் துள்ளினாள். அம்மா கண்டிப்பாக வாங்கி தருவார் என்று எண்ணி அம்மா இவை மிகவும் அழகாக இருக்கிறதல்லவா என்றாள். அம்மாவும் ஆமாம் என் செல்லமே என்று சொல்லிக்கொண்டே அந்த கடையை கடந்தார். ரோஸ்மாண்ட் மனக்கோட்டையெல்லாம் ஒவ்வொன்றாக தகர்ந்து கொண்டே போனது.

அழகான நகைக் கடைக்கு அருகில் நடந்தனர். அம்மா நாம் கண்டிப்பாக இங்கு ஏதாவது வாங்க வேண்டும் என்றாள் ரோஸ்மாண்ட். அம்மா இல்லை மகளே இவை வாங்குவதற்கான எந்த விழாக்களும் இப்பொது வரவில்லை என்றார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியே ஆட்சியின் உயிர்.
நடுநிலைமையே நீதியின் உயிர்.
– ஜஸ்டினியன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவி துறக்கக் கண்டேன்

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா அவர்கள் தனது பதவியை இராஜினாமாச் செய்து விட்டு நாட்டை விட்டு வெளியேறிய விவகாரத்தால் பலரும் தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கின்றனர்.

ஒரு நீதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல். தீர்ப்பை மாற்றி எழுதுமாறு சட்டமா அதிபர் அழுத்தம் கொடுத்ததான தகவல்கள் என எல்லாமும் சேர்ந்து நீதிபரிபாலனத்திலும் இப்படியா? என்ற கேள்விக்கு விடை காண முடியாமல் மனம் குழம்பிக் கொண்டிருக்கிறது.

ஆம், நீதிமன்றத் தீர்ப்பு என்றால் அதில் எந்தத் தலையீடும் இருக்க முடியாது. இருக்காது.

தீர்ப்பு என்றால் அது நீதிமான் என்ற கடவுள் ஸ்தானத்தில் இருக்கக்கூடியவர் எழுதுகின்ற தீர்ப்பு.

எனவே அந்தத் தீர்ப்புகளில் எவரும் தலையிட முடியாது என்பதுதான் பொதுமக்களாகிய எங்களின் நம்பிக்கை.

இந்த நம்பிக்கையில் சிற்சில கீறல்கள் ஏற்படுவதான சம்பவங்கள் நடந்ததுண்டு.

உதாரணத்துக்கு பிரதம நீதியரசராக இருந்த சரத் என் சில்வா, தன் ஓய்வுக்கு பின்னர்; தன்னாலேயே மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவி வகித்தார். நான் நினைத்திருந்தால், அவரை சிறைக்கு அனுப்பியிருக்க முடியும் எனக் கூறியிருந்தார்.

இந்த நாட்டின் பிரதம நீதியரசராக இருந்த ஒருவர் அந்தப் பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் மேற்கண்டவாறு கூறியபோது தலைசுற்றியது.

காரணம் சட்டத்தை, நீதியைப் புறந்தள்ளி மகிந்த ராஜபக்ஷவை குற்றத்தினின்றும் விடுவிக்கின்ற செயலை ஒரு பிரதம நீதியரசர் செய்தாரா?. அப்படியானால், எதற்காக நீதிமன்றம்?. எதற்காக வழக்கு?. எதற்காக வழக்கறிஞர்கள்? எதற்காக நீதி நிர்வாகம் என்ற கேள்விகள் எழவே செய்யும்.

இவ்வாறான கேள்விகள் எழுந்தாலும் நீதிமன்றங்கள் மீதும் நீதிபதிகள் மீதும் கொண்ட அதீத நம்பிக்கையானது அந்தக் கேள்விகளைச் சீரணம் செய்தன.

எனினும் நீதிபரிபாலனத்துக்கு ஏற்பட்ட குந்தகத்தை நினைத்தவாறு கட்டிலில் அயர்ந்து கொண்டேன்.

இஃதென்ன ஆச்சரியம் எங்கும் மக்கள் எழுச்சிப் போராட்டம் நீதி வேண்டும்... நீதி வேண்டும்... என வானதிரும் கோசங்கள்.

தமிழ் மக்களும் தமிழ் அரசியல்வாதிகளும் ஒன்றுபட்ட ஓரணியில் திரண்டு நிற்கின்றனர்.

தமிழ் நீதிபதிக்கு உயிர் அச்சுறுத்தலா? விடமாட்டோம். நீதித்துறை சுயாதீனமாக இயங்க வேண்டும் என்ற பதாதைகள் உயர்ந்து நிற்கின்றன.

திடீரென சிலர் கையை உயர்த்துகின்றனர். ஓரமாக நிற்கும் யான் அவர்களை எட்டிப் பார்க்கின்றேன்.

ஓ! அவர்கள் நம் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள். எதற்காக கை உயர்த்துகிறார்கள். நிதானமாக நின்று பார்த்தேன்.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் பாராளுமன்றத்தின் மீதும் அரசாங்கத்தின் மீதும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் மீதும் நம்பிக்கையை இழந்துள்ளதால் நாங்கள் அனைவரும் எங்கள் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்கின்றோம்.

இவ்வாறு அவர்கள் கூற, தமிழ் மக்களெல்லாம் விண்ணதிரும் கரகோசம் செய்ய திணுக்குற்ற நான் கட்டிலால் விழுந்தேன். கண்டது கனவு என்றுணர சிறிது நேரம் ஆயிற்று.

# 31 பால் பண்ணைகளை இந்தியாவுக்கு விற்க திட்டம்

## ஜே.வி.பி தலைவர் அநுர

(கொழும்பு)

மில்கோ, ஹைலேண்ட் மற்றும் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபைக்கு சொந்தமான 31 பால் பண்ணைகளை இந்தியாவின் அமுல் டைரி நிறுவனத்திற்கு விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மில்கோவை விற்பனை செய்ய ஏற்கனவே அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது, அதே நேரத்தில் இந்தியாவின் அமுல் டைரி நிறுவனத்திற்கு 'ஹைலேண்ட்' விற்பனைக்கு மற்றொரு அமைச்சரவைப் பத்திரம் இறுதி செய்யப்பட்டுள்ளது என்றார்.

மக்கள் விடுதலை முன்னணியின் மாவனல்லை தேர்தல் மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

NLDB க்கு சொந்தமான அதிகாம, ரிதியகம, நாரம்மல மற்றும் பொலன்னறுவை உள்ளிட்ட 21 பால் பண்ணைகள் திட்டத்திற்கு அமைய விற்பனை செய்யப்படும்.

இது தொடர்பாக இரண்டு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், பண்ணைகளில் உள்ள நிலம், மரங்கள் மற்றும் தோட்டங்களை மதிப்பிடுவதற்கு ஒரு குழுவும், பண்ணைகளில் உள்ள விலங்குகள் மற்றும் உபகரணங்களை மதிப்பிடுவதற்கு NLDB பணிப்பாளர் நாயகம் தலைமையிலான இரண்டாவது குழுவும் பணிக்கப்பட்டுள்ளது. .

எங்கள் 31 பால் பண்ணைகளின் நிலை எங்களுக்குத் தெரியும். அவற்றின் நிலைமைகளைப் பற்றி நாங்கள் திருப்தியடைய முடியாது. அங்குள்ள வளங்களில் இருந்து அதிகபட்ச பலன்களைப் பெற வேண்டும். ஆட்சியாளர்களுக்கு அவ்வாறு செய்வதில் ஆர்வம் இல்லை. அவர்கள் சிறந்ததைப் பயன்படுத்த வேண்டும். தொழில்நுட்பம் மற்றும் அவற்றை மேம்படுத்தவும் ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளால் அவை நஷ்டத்தை சந்திக்கின்றன, என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## மிருசுவில் - கரம்பகத்தில் வெடிபொருட்கள்

(கொடிகாமம்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மிருசுவில்- கரம்பகம் பகுதியில் உள்ள இரு வேறு தனியார் காணிகளில் நேற்று திங்கட்கிழமை வெடிக்காத நிலையில் வெடிபொருட்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

ஒரு காணியில் கைக்குண்டு ஒன்றும்,மற்றைய காணியில் மோட்டார்ஷெல் ஒன்றும் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் காணி உரிமையாளர்கள் இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெடிபொருட்களை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

## வங்கிக்குள் நுழைந்து தங்க நகைகள் கொள்ளை

(கொழும்பு)

வென்னப்புவ - அங்கம்பிட்டிய பகுதியிலுள்ள அரச வங்கியொன்றில் தங்க நகைகள் கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சுமார் 7 கோடி ரூபா பெறுமதியுடைய தங்க நகைகள் இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 28 ஆம் திகதி இந்த தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இரவு வேளையில் வங்கிக்குள் நுழைந்த குழுவினரால் பாதுகாப்புப் பெட்டகம் உடைக்கப்பட்டு தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் இதுவரை யாரும் கைது செய்யப்படாத நிலையில், தீவிர விசாரணையை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ம-7)

## குளவி கொட்டியதில் 26 பேர் படுகாயம்

(வென்னப்புவ)

வென்னப்புவ - மார்ட்டின் வனக் கல்லூரியின் அதிபர் உட்பட 26 பேர் நேற்று பிற்பகல் குளவி கொட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குளவிக் கொட்டுக்கு இலக்காகி காயமடைந்தவர்களில் அதிபர், நான்கு ஆசிரியர்கள் மற்றும் 21 மாணவர்கள் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பிட்ட நபர்கள் லுணுவில பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

மேலும் அதிபர், இரண்டு ஆசிரியர்கள் மற்றும் நான்கு மாணவர்கள் மேலதிக சிகிச்சைக்காக லுணுவில வைத்தியசாலையிலிருந்து மாரவில தள வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த பாடசாலைக்கு அருகில் உள்ள தோட்டத்தில் இருக்கும் குளவிக் கூட்டில் இருந்து வந்த குளவிகளே இவ்வாறு அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தாக்குதலுக்கு உள்ளாகியதாக மேலும் தெரியவந்துள்ளது. (ம-7)

## மரம் முறிந்து விழுந்ததில் இளைஞன் உயிரிழப்பு

மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலை, மாவடிமுன்மாரி கிராமத்தில் வெட்டப்பட்ட மரக்கிளையுடன் கீழே வீழ்ந்து இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாவடிமுன்மாரி கிராமத்தில் நேற்று காலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சகோதரர்கள் இருவர், விவசாய நடவடிக்கைக்காக தமது காணியை சுத்தம் செய்தபோது ஒருவர் அங்கிருந்த புளிய மரத்தின் கிளைகளை வெட்டியுள்ளார்.

இதன்போது மரம் முறிந்து வீழ்ந்துள்ள நிலையில் இளைஞர் கீழே வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

மண்டூர் திடீர் மரண விசாரணை அதிகாரி சம்பவ இடத்திற்கு சென்று சடலத்தை பார்வையிட்டார்.

சம்பவம் தொடர்பில் கொக்கட்டிச்சோலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

## ரயிலுக்காக காத்திருந்த பயணி உயிரிழப்பு

ஹட்டன் ரயில் நிலையத்தில் அமர்ந்திருந்த பயணி ஒருவர் கதிரையில் அமர்ந்திருந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

மஸ்கெலியா, நல்லதண்ணி முல்லுகாமம் கீழ் பிரிவை வசிப்பிடமாகக் கொண்ட பி.எஸ். ஆறுமுகம் (வயது 70) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ரயில் வரும் வரை பயணிகள் ஓய்வெடுக்கும் கதிரையில் அமர்ந்திருந்த நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

அவருடைய உடல், பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா - கிளங்கன் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை ஹட்டன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## பொலநறுவை யுகத்திற்குப்பின் கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சி வரை - பகுதி II

01

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



### பொலநறுவை வீழ்ச்சி

இலங்கை வரலாற்றில் அநுராதபுரக் காலத்தின் ஆரம்பத்தில் இருந்தே இடையிடையே தென்னிந்தியாவின் ஆக்கிரமிப்புக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை இருந்தது. இலங்கையின் ஆட்சி துறையில் குழப்பம் காணப்பட்ட வேளையிலும் பலவீனமான ஆட்சியாளர் ஆட்சிக்கு வந்தபோதும் தென்னிந்திய ஆக்கிரமிப்புக்கள் இடம்பெற்றன என்று மகாவம்சம் கூறுகின்றது.

மகாவம்சத்திற்கு ஏற்ப முதன் முதலாக தென்னிந்திய ஆக்கிரமிப்பு நிகழ்ந்தது சூரதிஸ்ஸ மன்னனுடைய காலத்திலாகும். இவ்வாக்கிரமிப்பு சேனன், குத்திகன் ஆகிய இரு குதிரை வியாபாரிகளால் மேற்கொள்ளப்பட்டது. இவர்கள் அநுராதபுரத்தைக் கைப்பற்றி 22 வருடங்கள் ஆட்சி செய்தனர். இந்த ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து நாடு அசேல மன்னனால் மீட்கப்பட்டது.

அவனுடைய ஆட்சிக் காலத்தில் நாடு சோழரின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியது. இது எல்லாளனால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பாகும். எல்லாளன் 44 ஆண்டுகள் ஆட்சி செய்தான். இவன் நீதி வழுவாத மன்னன் என மகாவம்சத்தில் குறிப்பிடப்படுகின்றது. 'கி.மு 161 இல் துட்டகைமுனு அரசன் எல்லாளனைத் தோற்கடித்து அநுராதபுர இராச்சியத்தைக் கைப்பற்றி முழு இலங்கையையும் ஒன்று படுத்தி ஆண்டான்.

வலகம்பா மன்னன் ஆட்சிக்கு வந்த பின் புலகத்தன் உட்பட ஏழு தென்னிந்தியத் தலைவர்கள் சேனையுடன் வந்து ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றினர். அவர்களுள் ஐவர் 14 வருடங்கள் அநுராபுரத்தை ஆட்சி செய்தனர். 14 வருடங்களுக்குப் பின் வலகம்பா மன்னன் கி.மு 89 இல் மீண்டும் ஆட்சியைப் பெற்றுக் கொண்டான்.

மித்தசேனன் அரசனுடைய ஆட்சிக் காலத்தில் பண்டு, பாரிந்த, குட்டபாரிந்த, திரிதரன், தாடியன், பீடியன் ஆகிய தென்னிந்தியர் இலங்கையை ஆக்கிரமித்தனர். இவர்கள் 27 வருடங்கள் ஆட்சி செய்தபின் மன்னன் தாதுசேனனால் நாடு மீட்கப்பட்டு ஐக்கியப் படுத்தப்பட்டது.

முதலாம் சேனனின் காலத்தில் பாண்டிய நாட்டில் இருந்து வந்த ஸ்ரீமாறஸ்ரீ வல்லபன் இலங்கையை ஆக்கிரமித்த பொழுதிலும் அவன் செல்வத்தை சூறையாடித் திரும்பிச் சென்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கி.பி 993 இல் முதலாம் இராஜராஜன் என்ற சோழ அரசன் இலங்கையை ஆக்கிரமித்தான். அப்போது இங்கு காணப்பட்ட குழப்பமான அரசியல் நிலைமையால் இலகுவாக அவனால் ஆட்சியைக் கைப்பற்ற முடிந்தது. கி.பி 1017 இல் முதலாம் இராஜேந்திரன் உருகுணையைக் கைப்பற்றி ஐந்தாம் மகிந்தனைக் கைதியாக இந்தியாவிற்கு அழைத்துச் சென்றான். இவர்கள் பொலநறுவையை ஆட்சி மையமாக (தலைநகராக) தெரிவு செய்தனர். அன்று முதல் பொலநறுவை இலங்கையின் தலைநகராக மாறியது. கி.பி 1070 இல் முதலாம் விஜயபாகு மன்னனால் சோழர்களிடம் இருந்து பொலநறுவை கைப்பற்றப்பட்டது.

நிஸ்ஸங்க மல்லனின் பின் பொலநறுவை இராச்சியத்தின் பிரதானமான ஆட்சியாளர் எவரும் உருவாகவில்லை. அரசியலில் உறுதியற்றதன்மை ஏற்பட்டது. இதனால் படைவீரர்கள் பலம் பெற்றனர். இவர்கள் அரசனின் பலத்தைக் குறைத்தனர். இச்சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக் கொண்டு கி.பி 1215 இல் கலிங்க மாகன் பொலநறுவையின் இறுதி மன்னன் பராக்கிரம பாண்டியனைத் தோற்கடித்து ஆட்சியைப் பெற்றுக் கொண்டான். கலிங்க மாகனால் அரசுரிமை உடைய இளவரசர்கள் கொல்லப்பட்டதுடன் பிக்குகளுக்கும் பிரபுகளுக்கும் இவனால் அதிக துன்பம் ஏற்பட்டதாகவும் நூல்கள், விகாரைகள் என்பவற்றை அழித்ததாகவும் பூஜாவலி, மகாவம்சம் ஆகிய சிங்கள வரலாற்று நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கலிங்க மற்றும் பாண்டிய வம்சங்களுக்கிடையே ஏற்பட்ட சிம்மாசன உரிமைப் போராட்டமும் பொலநறுவை வீழ்ச்சிக்கு ஒரு காரணமாக அமைந்தது. பலவீனமான மன்னர்கள் ஆட்சிபீடம் ஏறிய காரணத்தினால் அவர்களால் நிர்வாகத்தை சிறந்த முறையில் முன்னெடுக்க முடியவில்லை. மத்திய நிர்வாகத்தை சிறந்த முறையில் முன்னெடுக்க முடியவில்லை. மத்திய நிர்வாகம் சீர்குலைந்த காரணத்தினால் மத்திய நிர்வாகத்துடன் இணைந்த ஏனைய நிர்வாக நடவடிக்கைகள் பாதிக்கத் தொடங்கின. குறிப்பாக நீர்ப்பாசனக் கட்டமைப்புடன் இணைந்த அனைத்தும் கவனிப்பாரின்றி சீரழிந்து போனது. அரசர்கள் இந்நீர்ப்பாசனத்துடன் இணைந்த விவசாய பொருளதாரம் வீழ்ச்சியுற்று இராசதானி வீழ்ச்சிக்கே வழிகோலியது.

இது மட்டுமன்றி கவனிப்பாரற்று விடப்பட்ட குளங்களிலிருந்து நுளம்புகள் பெருகி மக்களுக்கு மலேரியா போன்ற கொடிய நோய்கள் பரவின. இதனால் இராசரட்டை மக்கள் பொலநறுவையைக் கைவிட்டு பாதுகாப்புக் கருதி வேறு இடங்களுக்குச் செல்ல முற்பட்டனர். இந்நிலை பொலநறுவை வீழ்ச்சிக்கு காரணமாகியது. பொலநறுவை வீழ்ச்சியை துரிதப்படுத்திய உடனடிக் காரணியாகக் குறிப்பிடப்படுவது கலிங்க மன்னனின் படையெடுப்பாகும்.

இவ்வாறு விஜயனின் வருகையுடன் தொடங்கிய ஆரியர் குடியேற்றங்களின் பரம்பலில் இருந்து பொலநறுவைக் காலத்தின் இறுதி வரையிலான அரசியல் வரலாற்றின் முக்கிய சந்தர்ப்பங்கள் தொடர்பான தகவல்கள் பற்றியும் அக்காலத்தில் இருந்த நாணயங்கள் பற்றியும் பகுதி 1 இல் பார்த்திருந்தோம்.

முன்னர் கூறியது போல பொலநறுவை வீழ்ச்சிக்குப் பின்னர் தலைவர்கள், பௌத்தகுருமார், பொதுமக்கள் ஆகியோர் பாதுகாப்புத் தேடித் தென்மேற்குப் பிரதேசத்திற்கு இடம்பெயர்ந்தனர். அவர்களில் சிலர் அப்பிரதேசங்களில் காணப்பட்ட காட்டுப் பகுதிகளையும் குன்றுப் பகுதிகளையும் அண்மித்த இடங்களைத் தலைநகராகக் கொண்டு, அவற்றைச் சூழவுள்ள பகுதிகளை ஆட்சி செய்தனர். அவ்வாறு ஆட்சி செய்தவர்களில் சிலர் வருமாறு யாப்பகூவ - சுப (படைத்தளபதி), மினிப்பே - சங்க (படைத்தளபதி), கோவிந்தமல - புவனேகபாகு ஆதிபாத (பிரதானி), தம்பதெனிய - விஜயபாகு (இளவரசன்).

### ஸ்ரீசங்கபோதிவம்சம் தம்பதெனிய இராசதானி (கி.பி 1220 - 1270)

தம்பதெனிய இராச்சியம் அல்லது தம்பதெனிய இராசதானி என்பது கி.பி 1220-1270 காலப் பகுதியில் இலங்கையில் இருந்த ஒரு இராச்சியம் ஆகும். இது குருநாகலில் இருந்து தென்மேற்கே 18 மைல் தொலைவில் அமைந்துள்ளது.கி.பி 1215 இல், பொலநறுவை இராச்சியத்தின் மீது கலிங்கமாகன் படையெடுத்த போது ரஜரட்ட மக்கள் ஈரமான பகுதிக்கு இடம்பெயரத் தொடங்கினர். கலிங்கமாகன் பொலநறுவை இராச்சியத்தைக் கைப்பற்றிய பின்னர் மூன்றாம் விஜயபாகு மன்னனால் (1232-1236) தம்பதெனிய இராச்சியம் உருவாக்கப்பட்டது.

புராதன இலங்கையின் மூன்றாவது தலைநகரமாக விளங்கிய தம்பதெனியா நகரத்தில் 13 ஆம் நூற்றாண்டில் மூன்றாம் விஜயபாகு மன்னன் புனிதத் தாதுக்களைப் புனித பேழையில் வைத்து தூபியொன்றை நிர்மாணித்ததாகவும் இதன் காரணமாக இப்பிரதேசம் பிரபல்யம் பெற்றதாகவும் கூறப்படுகின்றது. அத்துடன் இங்குள்ள குன்றின் மீது ஒரு கோட்டை நிர்மாணிக்கப்பட்டிருந்ததாகவும் அதனுடன் இணைந்த நீர் அகழி, பாதுகாப்பு அரண்கள், அரச பூங்கா என்பன அமைந்திருந்ததாகவும் கூறப்படுகின்றது. விஜயபாகு மன்னனுக்குப் பிறகு இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன் இப்பிரதேசத்தை ஆட்சி புரிந்ததாகவும் இந்த மன்னன் சிறந்த கவிஞனாக, ஒரு பண்டிதராக, சிறந்த ஆட்சியாளராகத் திகழ்ந்தமையால் தம்பதெனியா நகரம் வரலாற்றுப் பிரசித்தி பெற்றதாகக் கூறப்படுகின்றது. அதன் பின்னர் நான்காம் விஜயபாகு மன்னன் மற்றும் முதலாம் புவனேகபாகு மன்னன் ஆகியோர் ஆட்சி புரிந்தனர். புவனேகபாகு மன்னன் தம்பதெனியாவுக்குப் பின்னர் யாப்பஹூவ பிரதேசத்தை தலைநகராக்கிக் கொண்டான்.

### 3 ஆம் விஜயபாகு (கி.பி 1220- 1224)

தம்பதெனியாவை தலைநகராக்கியவன் 3 ஆம் விஜயபாகு ஆவார். இவர் பற்றி அறிய மகாவம்சம், பூஜாவலிய, ராஜரத்னாகா போன்ற நூல்கள் உதவுகின்றன. 3ஆம் விஜயபாகு மன்னனுடைய பூர்வீகம் பற்றிய தகவல்களின் தெளிவின்மை. நாட்டின் முக்கியமான அரச வம்சத்தின் தொடர்ச்சியாக வந்தவன் என வம்சக் கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளமை போன்றவை அவன் யார் என்பது தெளிவாக தெரியவில்லை.

ராஜரத்னாகாரயில் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி இவரது தந்தை கலிங்க வம்சத்தவராவார். சில பாண்டிய கல்வெட்டு ஆதாரங்களின் படி அவர் பாண்டிய வம்சத்திற்கு உரியவராவார். சில மூலாதாரங்களின் படி அவர் சிரிசங்கபோ பரம்பரையில் இருந்து வந்தவராகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

3 ஆம் விஜயபாகு தனது அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்தது வன்னி பிரதானி ஒருவனாக என்று மகாவம்சத்திலும் பூஜாவலியிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையின் பல பகுதிகளிலும் இருந்த தலைவர்கள் மத்தியில் மாகனுக்கு எதிராக சிறப்புற ஒழுங்கமைத்து செயற்பட 3ஆம் விஜயபாகு மன்னனுக்கு மட்டுமே பலமிருந்தது. சமகால மூலாதாரங்களில் இவர் வன்னி நிரிந்து என அறியப்படுகின்றார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதுச்சாலைகள்...

தின் ஊடகப் பேச்சாளரான மேலதிக மதுவரி ஆணையாளர் நாயகம் கபில குமாரசிங்க ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உலகளாவிய ரீதியில் இன்று சர்வ தேச மது ஒழிப்பு தினம் அனுஷ்டிக்கப் படவுள்ளது.

இதனை முன்னிட்டு இந்தத் தீர் மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## சரவணராஜா...

பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் உத்தரவிட்டுள்ளார்.

சர்ச்சைக்குரிய குருந்தூர்மலை விகாரை வழக்கை விசாரித்த சரவண ராஜா, செப்ரெம்பர் 23 அன்று நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு அனுப் பிய கடிதத்தில், மாவட்ட நீதிபதி, நீதவான், குடும்ப நீதிமன்ற நீதிபதி, முதன்மை நீதிமன்ற நீதிபதி உள்ளிட்ட பல்வேறு நீதித்துறைப் பொறுப்புகளில் இருந்து விலகுவதாகத் தெரிவித்திருந் தார்.

அவருக்கு கொலை மிரட்டல் விடுக் கப்பட்டதே அவரது பதவி விலகலுக்கு காரணம் என நீதிபதி குறிப்பிட்டார்.

முன்னதாக, நீதவான் சரவணராஜா வின் திடீர் பதவி விலகல் தொடர்பில் உடனடி விரிவான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவரது செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

இந்நிலையிலேயே பாதுகாப்பு அமைச்சர் சிஐடிக்கு விசாரணையை ஒப்படைத்துள்ளார். (ம-7)

## அரச பொருளா...

நேற்றுக் காலை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் அமெரிக்க தூதுவர் பிரேமதாஸவை சந்தித்த போதே அவர் இதனை தெரிவித்துள் ளார்.

பிரேமதாஸ மற்றும் அமெரிக்க தூது வர் ஆகியோர் இலங்கை மக்கள் எதிர் நோக்கும் தற்போதைய பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடியதாக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச பொருளாதாரக் கொள்கையி னால் இலங்கை பல்வேறு துன்பங்க ளுக்கு உள்ளாகி வருவதாக பிரேம தாஸ அமெரிக்கத் தூதுவரிடம் தெரி வித்தார்.

இலங்கையில் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்படுவது குறித்தும் அவர் அமெ ரிக்க தூதுவருக்கு தெரிவித்ததாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ம-7)

## யாழ்.மாவட்ட...

முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா தொடர்பிலும், நீதித் துறையின் சுயா தீனத்தை உறுதிப்படுத்தி சட்டவாட் சியை நிலைநாட்டவும் ஏதுவாக எதிர் வரும் இரு வாரங்களுக்கு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவது என தீர்மானித்துள்ளனர்.

சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறை வேற்றுக்குழுவில் எடுக்கப்பட்ட முக் கிய தீர்மானங்கள் பின்வருமாறு,

முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங் கத்தால் எடுக்கப்பட்ட பணிப்பகிஷ் கரிப்பில் இன்று இணைவதுடன் யாழ். சட்டத்தரணிகள் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் முல்லைத்தீவு சென்று நீதிமன்றத்தின் முன்னால் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வது.

நீதித்துறைக்கு ஏற்பட்ட இந்த அச் சுறுத்தலை கண்டித்து அடுத்து வரும் இரண்டு வாரங்கள் கறுப்பு நிறத்தி லான முகக்கவசங்களை அணிந்து கடமையில் ஈடுபடுவது.

தமிழ் கட்சிகளினால் மருதனார் மடம் முதல் யாழ்ப்பாணம் வரை குறித்த நீதிபதிக்கு எதிரான அச்சுறுத்தல் களைக் கண்டித்து நாளை நடத்த இருக்கும் மனிதச் சங்கிலி போராட் டத்திற்கு ஆதரவை தருவதுடன் அதில் அனைத்து சட்டத்தரணிகளும் பங்கு கொள்வது.

இன்றும் நாளையும் சட்டத்தரணி கள் வடமாகாண நீதிமன்ற நடவடிக் கைகளை பகிஷ்கரிப்பதுடன் இது தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய மேலதிக நடவடிக்கை தொடர்பான விசேட பொதுக்கூட்டத்தினை நாளை 4ஆம் திகதி நடத்துதல்.

முல்லைத்தீவு நீதிபதிக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல் தொடர்பில் பாரபட்சமற்ற உரிய சுயாதீன விசாரணை செய்யப்பட வேண்டும்.

எச்சந்தர்ப்பத்திலும் நீதித்துறை சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட வேண் டும் போன்ற முக்கிய தீர்மானங்களை எடுத்துள்ளனர். (ம-7,38)

## முல்லை சட்டத்...

நடத்தியுள்ளார்கள். அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கை யிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீதித்துறை என்பது சுதந்திரமாக செயற்பட வேண்டும். நீதித்துறை ஒழுங் கான சுதந்திரமாக இயங்கி வந்திருந் தாலும் ஓர் இரு இடங்களில் இந்த சுதந்திரமானது பாதிக்கப்பட்டிருந்தது. அந்தவகையில் இம்மாவட்டத்தின் நீதிபதி ஒருவர் இராஜினாமா செய்யும் அளவிற்கு நீதித்துறை சுதந்திரம் பாதிக்கப்பட்டது அல்லாமல் நீதி பதியின் சுயாதீனமான தன்மைகளும் கேள்விக்குட்படுத்தப்பட்டிருக்கின்றது.

அந்தவகையில் முல்லைத்தீவு நீதி பதி சரவண ராஜாவிற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கோரியே தொடர் பணிப்புறக் கணிப்பில் ஈடுப டுவுள்ளோம்.

முல்லைத் தீவு சட்டத்தரணி கள் சங்கத்தி னைச் சார்ந்த சட் டத்தரணிகள் அனைவரும் நீதி மன்றவழக்குகளில் முன்னிலை யாகாது தொடர் ந்து நீதிமன்ற நட வடிக்கைகளை புறக் கணிப்பார் கள் எனத் தெரி விக்கப்பட்டுள் ளது. (ம-7,299)

## முல்...

வுள்ளது.

இன்று காலை 10 மணிக்கு முல் லைத்தீவு நீதி மன்றம் முன்பாக வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இருந்து அதிகள வான சட்டத் தரணிகள் இணைந்து மாபெரும் போரா ட்டம் ஒன்றை முன்னெடுக்க வுள்ளனர்.

குறிப்பாக முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் கிளிநொச்சி, வவு னியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம் பாறை மாவட்டங் கள் உள்ளிட்ட வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள அனை த்து மாவட்டங்க ளிலும் உள்ள அனைத்து சட் டத்தரணிகள் சங் கங்களின் சட்டத் தரணிகளும் இணைந்து இந்த பாரிய போராட் டத்தை முன்னெ டுக்கவுள்ளனர் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ம-7,299)

## யாழில் நாளை...

சங்கிலிப் போராட்டம் இடம்பெறவுள் ளது.

இதில் அனைவரையும் பங்குபற்று மாறு தமிழ்க் கட்சித் தலைவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

அதிர்ஷ்டம் வெல்லப்பட்டது
கல்வியங்காடு விற்பனை முகவர் உ.விஜயகுமாரின் ஊடாக விற்பனை செய்யப்பட்டு 22.09.2023 இடம் பெற்ற அதகோடிபதி சீட்டிழுப்பின் மூலம் முதல் பரிசாக 20 இலட்சம் ரூபாவும் 01.10.2023 கொவிசெத சீட்டிழுப்பின் மூலம் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவும் வெல்லப்பட்டுள்ளதென்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
(17327)



தன நிதானய
திகதி - 2023.10.02
சீட்டிழுப்பு இலக்கம் - 1285
U 15 42 53 59 U
Double Chance 11524

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3497
சீட்டிழுப்பு திகதி 02.10.2023
T 11 22 33 60
T 24638

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.10.02
சீட்டிழுப்பு இலக்கம் 564
கடகம் 05 07 33 43 கடகம்

மஹஜன சம்பத
திகதி 2023/10/02
சீட்டிழுப்பு இலக்கம் 5255
0 0 5 4 5 8 5

மெகா பவர்
திகதி 02/10/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1603
N 23 48 56 60 63
31686

Lucky 7
திகதி 02.10.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0081
L7 இலக்கம் 1 8
வெற்றி இலக்கினம் கடகம்
வெற்றி இலக்கங்கள் 9 5 4 6 7 2

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2229 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.10.02 தினம் திங்கட்கிழமை
22 24 40 46 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 70,030,412.40

சனிதா
திகதி 2023.10.02 வெற்றி வாரம் 4390 வர்ணம் இளம் நீலம்
16 25 26 37 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.59,316,648.00
41536

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3941 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.10.02 தினம் திங்கட்கிழமை
17 29 49 55 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,010,416/-
402563 316

கப்ருக
திகதி 02.10.2023 வெற்றி வாரம் 1405 வர்ணம் பச்சை
R 15 47 48 66 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 446,960,214.20
746849 491

ஜயோதா
திகதி 2023.10.02 வெற்றி வாரம் 1961 வர்ணம் செம்மஞ்சள்
09 11 64 66 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.46,309,171.20

அத கோடிபதி
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2055
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2023.10.02
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ 58,701,360/-
18 42 47 58 H
252198


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17302)

076 825 7716 (ஆகாஸ்)



யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்தில்
பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன

1. பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (25)
2. சுத்திகரிப்பு சேவை மேற்பார்வையாளர்கள் (பெண்) - (02)
3. சுத்திகரிப்பு பணியாளர்கள் (ஆண் மற்றும் பெண்)

இல.758, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
நேரில் வருகை தரவும்
(04.10.2023 - 15.10.2023) (17326)



மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7355)

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470


# வாகன வரி அனுமதியை வீட்டிலிருந்தே பெறலாம்

## ஒக்டோபர் 07 முதல் புதிய நடைமுறை

அனைத்து வாகன வருமான வரி அனுமதிப்பத்திரங்களை விநியோகிக்கும் புதிய கட்டமைப்பு (eRL 2.0) அறிமுகப்படுத்தல், இம்மாதம் 07ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய அனைத்து மாகாணங்களிலும் இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக குறிப்பிட்ட இராஜாங்க அமைச்சர், இந்தப் பொறிமுறையின் ஊடாக வீட்டிலிருந்தவாறே மக்களுக்கு வாகன வருமான வரி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளும் வசதிகள் கிடைக்கும் என்றும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் இதனைத் தெரிவித்தார்.(ம-7)

# நெடுந்தீவு கடற்கரையில் சடலம் கரையொதுங்கியது

(நெடுந்தீவு)

நெடுந்தீவு கிழக்கு குயின்ரவர் அமைந்துள்ள கடற்கரையில் உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று கரையொதுங்கியுள்ளது.

அடையாளம் தெரியாத சடலம் ஒன்று கரையொதுங்கிய நிலையில் காணப்பட்டதாக கிடைத்த தகவலைத் தொடர்ந்து கிராம அலுவலர், பொலிஸார் மற்றும் கடற்படையினர் சடலத்தை மீட்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

(ம-7)

# நீதித்துறைக்கு...

நீதித்துறை மீது அரச நிர்வாகத்துறையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வகை நெருக்கீடுகள் காரணமாக, நாட்டைவிட்டு வெளியேறிச்சென்றுள்ள முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா அவர்களுக்கு நீதியும் பாதுகாப்பும் கிடைக்கக் கோரியும், நீதித்துறையினது சுயாதீனத்தைப் பாதுகாக்கக் கோரியும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் நேற்று கிளிநொச்சி நகரில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதுதொடர்பில், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்ரனியோ குட்ரெஸ் அவர்களுக்கு அனுப்பிவைப்பதற்கு ஏதுவாக, கொழும்பில் வைத்து, ஐக்கிய நாடுகள் சபையின் இலங் கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆன்ட்ரே பிரான்ச் அவர்களிடம், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் கையளிக்கப்படவுள்ள "இலங்கை நீதித்துறை மீதான அரச நெருக்கீடுகளுக்கு பரிகாரம் காண்பதற்கான பரிந்துரைப்பு மனு" வாசிக்கப்பட்டது.

அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

இலங்கைத்தீவில் கடந்த எழுபது (70) ஆண்டுகளுக்கு மேலாக நீடித்துவருகின்ற இன முரண்பாடுகள் தொடர்பிலும், சிங்களத்தின் கட்டமைக்கப்பட்ட இனரீதியான வஞ்சிப்புகள் தொடர்பிலும், அது இனப்படுகொலையாக வியாபகம் பெற்ற வரலாறு தொடர்பிலும் தங்கள் அறிக்கையாளர்கள் ஊடாக தாங்கள் அறிந்துள்ளீர்கள் என்பதை நாம் அறிவோம்.

ஒரு தேசிய இனத்தின் பாரம்பரிய வாழ்விடங்கள் மீதும், அதன் கூட்டுப் பண்பாடுகள் மீதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நீதி, நிர்வாகத்துறை ரீதியான பாகுபாடுகள் மற்றும் காலத்துக்குக் காலம் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களின் மூலமாக மேற்கொள்ளப்படுகின்ற வன்பறிப்புகள் என்பவை, உலகத்தில் வாழ்கின்ற எண்ணிக்கையில் குறைந்த ஒரு தேசிய இனக்குழுமத்தை எவ்வாறு நிர்மூலமாக்கும் என்பதை உணர்ந்துகொள்வது அத்தனை சிரமமானதல்ல. இலங்கைத்தீவில் தமிழ்த்தேசிய இனம்மீது மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையும் ஓரவஞ்சகப் போக்கும் இன்று இலங்கைத்தீவில் உள்ள தேசிய இனங்கள் அனைத்தினதும் ஜனநாயக நீதித்துறை சார் உரிமைகளைப் பறித்துள்ளது என்பது நிதர்சனமாகும். அரசிற்குப் பலம் கிடைக்கின்ற போதெல்லாம் அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொண்டு நிர்வாகத் துறையின் கைப்பொம்மையாக செயற்படும் விதமாகவே நீதித்துறை உருவாக்கப்பட்டு வருகிறது. நீதிச்சேவை ஆணைக் குழுவை நியமிக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்கி அதனூடாக நீதிபதிகளின் நியமனங்கள், பதவி உயர்வுகள், நலனோம்பு நயக்கொடைகள், பயிற்சிகள் மற்றும் பாதுகாப்பு என்பவையெல்லாம் அரசியல் அதிகார விருப்பப்படியே மேற்கொள்ளப்படுகின்றன.

இதன்மூலம் அரசு விரும்பிய தீர்ப்புகளைப் பெறவும், ஆணைகளை வழங்கவும், அரசியல் அதிகாரத்தைக் காபந்து செய்யவும் ஏற்றவகையில் இலங்கையின் நீதித்துறை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதனால் சட்டத்தின் ஆட்சி பறிக்கப்பட்டு நிர்வாகத்துறையின் நோக்கங்களை அடையும் வகையில், விசேடமாக அரசாங்கத்தினது போர்க்குற்றங்கள், இனப்படுகொலை விடயங்கள், நீதிக்குப் புறம்பான கொலைகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயங்கள், மனிதப்புதைகுழி விவகாரங்கள், பௌத்தமயமாக்கல், நில மற்றும் பண்பாட்டு ஆக்கிரமிப்பு என்பவற்றை சட்டமுறைமைகளுக்கு முரணாகக் கையாள்வதற்கு நீதித்துறை நிர்ப்பந்திக்கப்பட்டதன் விளைவே நீதிபதி சரவணராஜா அவர்கள் நாட்டை விட்டு வெளியேறிய நிகழ்வாகும்.

சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை தனது ஆட்சியின் நோக்காகக் கொண்டு சர்வாதிகாரச் சிந்தனைகளுக்கும் செயல்களுக்கும் ஜனநாயக முலாம் பூசிக்கொண்டு திடமான வெளியுறவு, பொருளாதாரக் கொள்கைகள் எவையுமின்றி, உறுதியான அரசியலமைப்பு ஏற்பாடுகளின்றி வெறும் இனத்துவேசச் சிந்தனைகளின்மேல் ஏறிநின்று இலங்கையின் நீதித்துறையினையும் இங்கு வாழ்கின்ற தமிழ்த்தேசிய இனத்தையும் கட்டமைக்கப்பட்ட வழிமுறைகளின் ஊடாக அரசு அழித்து ஒழித்து வரும் உச்ச தருணமாகிய இவ்வேளையில் தாங்களும் சர்வதேச சமூகமும் நேரடியாகத் தலையீடு செய்து அமைதி, சமாதானம், நல்லிணக்கம், நீதித்துறையின் சுயாதீனம் என்பவற்றைப் பாதுகாக்கவும் சகோதரத்துவம் மிக்க இலங்கையைக் கட்டியெழுப்பவும் தங்கள் எல்லாவகை வல்லமைகளும் அணுகுமுறைகளும் சமரசங்களற்ற வகையில் இலங்கைத்தீவுக்குத் தேவையென தங்களை அழைத்து நிற்கிறோம் என்றுள்ளது.

(ம-7)


காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கு ஸ்ரேசன் வீதியில் (காளி கோயிலுக்கும் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்திற்கும் இடையில்) 1 1/2 பரப்புக்களாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு. (17282)

077 728 6061



அலுவலக வேலை - பயிற்சி

2 மாத கால பயிற்சியுடன் உடனடி வேலைவாய்ப்பு

*நீங்கள் A/L எடுத்துவிட்டு மேற்படிப்புக்காக / வேலைக்காக காத்திருப்பவரா?
*இதோ! 2 மாத கால அலுவலக வேலையுடனான பயிற்சி நெறி
*பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்



(C-7365)
சம்பளம் - 60,000/- (2 மாதம்)
V2 TRAVELS - 0777-068-777



VILLAGE HOTEL
JAFFNA EXPRESS
பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE

யாழ் - கொழும்பு
2,900/=
வடமராட்சி - கொழும்பு
2,700/=



(17019)
T.P:077 544 8503



CANADA
VISITOR VISA



VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-7365)
0777-068-777
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS



வேலை வாய்ப்பு

இலங்கையின் முதற்தர காப்புறுதி நிறுவனத்தில்
வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

○ காப்புறுதி ஆலோசகர்
தகைமை – G.C.E O/L சித்தி
○ குழு முகாமையாளர்
தகைமை – G.C.E A/L சித்தி
ஒரு வருட அனுபவம்



விசேட அனுகூலங்கள்

◆ வருமானத்தை அதிகரிக்கும் வாய்ப்பு
◆ வெளிநாட்டுச் சுற்றுலா
◆ உள்ளூர் சுற்றுலா
◆ பதவியுயர்வு வாய்ப்பு (17319)

குறிப்பு : பகுதிநேரம் வேலை செய்ய விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்.சிபாரிசு செய்வோர் இருவரின் விபரங்களுடன் கூடிய சுயவிபரக்கோவையை 077 636 6789 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு Whatsapp செய்யவும்.



வெளிநாடுகளுக்கான
விரைவு பொதிகள் DHL

சகல நாடுகளுக்கான கடிதங்கள்
3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
சகல நாடுகளுக்கான பொதிகள்
5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
0777 554 528 (17311)



CANADA VISA

1)Minor Education - (Age Limit - 7 to 17 years)
தாய், தந்தை இருவரும் பிள்ளையுடன் பயணிக்கலாம்.
2)Visitor Visa - கனடாவில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் உள்ளோர் விண்ணப்பிக்கலாம்.
3)Student Visa-IELTS 6.00 உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.(jan 2024)
4)Work and Study Program - Course fee after Visa மற்றும் சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

Contact : VISA Consultant,
136, Adiyapatham Road,
Thirunelvely, Jaffna. T.P : 077 038 5584 (17311)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்றெட் ஸ்தா[illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org